சிலர் சேர்த்து சேர்த்து வைத்து பொட்டென்று மரித்துப் போய்விடுகின்றனர். தாங்களும் அனுபவிப்பது இல்லை. பிள்ளைகளையும் அனுபவிக்கவிடுவதும் இல்லை. அருமையானவர்களே, என்னத்தைக் கொண்டு போகப் போகிறீர்கள். என்னுடைய பெற்றோர்களுக்காக நான் ஆண்டவரைத் துதிக்கின்றேன். அவர்கள் எங்களுக்கு நல்ல உணவு கொடுத்து, கண்டித்து, புத்தி சொல்லி, நன்றாய்ப் படிக்கவைத்து, ஆண்டவரின் வழியில் எங்களை நடத்தி, நல்ல திருமண வாழ்க்கையை எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். ஆகவே, பிள்ளைகள், குடும்பம் செழிப்பாக இருப்பது தேவ சித்தம்.

### 4. சமாதானமுள்ள குடும்பம்
(Peaceful Family)

ஆண்டவர் இயேசு கூறினார்: எந்த வீட்டிற்குச் சென்றாலும் சமாதானம் என்று கூறுங்கள். நம்முடைய குடும்பங்கள் சமாதானமாய் இருப்பதே தேவனுடைய சித்தம். ஆரோக்கியமாக இருக்க வேண்டும். சுகமாக இருக்க வேண்டும். எப்படி எனில் தேவ வசனத்திற்கு முதலிடம் கொடுத்து, குடும்ப ஜெபம் செய்வோரின் குடும்பத்தில் சமாதானம் நிலைத்திருக்கும்.

### 5. திட்டமிட்ட குடும்பம்
(Planned Family)

குடும்பக் காரியங்களைத் திட்டமிட வேண்டும். பணத்தை செலவு செய்வதை, குடும்பமாக ஜெபம் செய்வதைத் திட்டமிட வேண்டும். அருமையானவர்களே, கர்த்தருக்குக் கொடுப்பதை, வீட்டுக்குச் செய்யப்படவேண்டியக் காரியங்களைத் திட்டமிட வேண்டும். திட்டமிடாமல் கடைக்குப் போனவுடன் எல்லாவற்றையும் வாங்க வேண்டுமானால் குடும்பத்தில் பிரச்சனை தான். ஆகவே, தேவையானதை வாங்குங்கள். பார்த்ததையெல்லாம் வாங்காதீர்கள். இல்லாமற்போகும் பொருட்கள் மேல் உன் கண்களைப் பறக்க விடுவானேன். வரவுக்குத் தக்க செலவு செய்யுங்கள். பொருளா தாரத்தைத் திட்டமிடுங்கள். கடன் வாங்கி ஒரு ஆசீர்வாதமும் வேண்டாம். கடன்வாங்கி கறிகூட சாப்பிட வேண்டாம் என்று தான் சொல்லுவேன். வீடுநிறைய தேவைக்கு மிஞ்சிய பொருட்கள், வீடு நிறைய வஸ்திரம் என்பது சமாதானமுள்ள குடும்பத்திற்கு ஏதுவாக இருக்காது. வீட்டில் பெருந்திண்டியான சாப்பாடு. அருமையானவர்களே, இது திட்டமிடாத குடும்பம் ஆகும். வருவாய்க்குத் தக்கவாறு வசதியைப் பெருக்கிக்கொள்ளலாம். பிரச்சினை வந்தாலும் அதை மேற்கொண்டு, ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து, மன்னிப்புக் கேட்டு, ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்க வேண்டும். சமாதானத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். குடும்பத்தைத் திட்டமிட்டு, கணவன் மனைவியின் ஒத்துழைப்போடு இருந்தால் குடும்பங்களில் சமாதானம் உண்டாகும். உங்கள் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்.

### 6. ஜெபம் செய்கின்ற குடும்பம்
(Praying Family)

எத்தனை குடும்பங்களில் குடும்ப ஜெபம் இல்லை. உங்களுடைய குடும்பங்களில் குடும்ப ஜெபம் இருக்கின்றதா என்பது உங்களுக்குத் தான் தெரியும். கட்டாயமாக பாட்டுப்பாடி, வேதம் வாசித்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவர் ஜெபம் செய்யுங்கள். அப்பொழுது தான் பிள்ளைகள் ஜெபிக்கக் கற்றுக் கொள்வார்கள். வீட்டில் ஜெபித்தால் தான், சபையில் பிள்ளைகள் ஜெபிப்பார்கள். ஆகவே, குடும்பங்கள் ஜெபிக்கின்ற குடும்பங்களாக, தேவனோடு சஞ்சரிக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஜெபிக்கின்ற குடும்பங்களைச் சத்துரு தொட முடியாது. ஜெபிக்கின்ற குடும்பத்தில் தேவபிரசன்னம் நிரம்பி





# குடும்பத்தைக் குறித்த தேவ சித்தம்

*Pr. S. Joseph Balachandran*

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். ஒவ்வொரு குடும்பத்தைக் குறித்தும், உங்களுடைய குடும்பத்தைக் குறித்தும் தேவனுடைய சித்தம் என்னவென்பதை வேதத்தின் அடிப்படையில் சில காரியங்களை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். பெந்தெகொஸ்தே நாளில்தான் சபை உண்டானது. ஆனால், ஆண்டவர் முதன் முதலில் உண்டாக்கின ஸ்தாபனம் குடும்பம். தாம் முதன் முதலில் உருவாக்கின அக்குடும்பத்தைக் குறித்த சித்தத்தை, தன் விருப்பத்தை ஆதி.1:27,28ல் மோசேயின் மூலமாக எழுதிவைத்தார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் என ஆதி. 1:27ல் வாசிக்கிறோம். ஆண்டவர் ஆதாமை ஒரு தனி நபராக சிருஷ்டிக்கவில்லை, ஆதாமுக்குள் ஏவாளையும் வைத்து ஆணும், பெண்ணுமாகச் சிருஷ்டித்தார். ஆண்டவர் குடும்பத்தின் மேல் அக்கரையுள்ளவர் என்பதை வேதாகமம் முழுவதும் வாசிக்கிறோம். உதாரணமாக ஆண்டவர் ஆசீர்வதிக்க விரும்புவது ஆபிரகாமை மட்டுமல்ல, ஆபிரகாமின் முழுக் குடும்பத்தையும் தான், லோத்தை மட்டுமல்ல, லோத்தின் முழுக்குடும்பத்தையும்தான். புதிய ஏற்பாட்டில், இரட்சிக்கப்பட நான் என்ன செய்ய வேண்டும் என்று சிறைச்சாலைக்காரன் கேட்டதற்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும், உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றும் கூறினார். தேவதூதன் கொர்நெலியுவிடம், நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்வான் (அப்.11:14) என்று பேதுருவைக் குறித்து சொல்வதையும் பார்க்கிறோம். கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடுங்கூட ஞானஸ்நானம் பெற்றான். லீதியாள் வீட்டாரும் குடும்பமாய் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

இப்படியாக ஒரு குடும்பத்தில் ஒருவர் இரட்சிக்கப்பட்டால் மற்றவர்களை ஆண்டவர் அப்படியே விட்டுவிடுவதில்லை. குடும்பமாய் இரட்சிக்கப்படுவது, தேவனை அறிவது ஆண்டவருடைய சித்தம். குடும்பமாய் ஊழியம் செய்வது, குடும்பமாய் ஆண்டவரை ஆராதிப்பது ஆண்டவருடைய சித்தம். ஆண்டவர் என்னுடைய, உங்களுடைய முழுக்குடும்பத்தின் மேல் அக்கரையுள்ளவராக இருக்கின்றார். நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் (ஆதி.1:27) என்று சொல்லி, தான் ஏற்படுத்தின முதலாவது குடும்பத்தை ஆசீர்வதித்தார். இதிலிருந்து உங்கள் குடும்பத்தைக் குறித்தும், ஒவ்வொரு முழுக்குடும்பத்தையும் குறித்தும் தேவ சித்தம் என்ன என்று உங்களுக்கு எழுத விரும்புகிறேன்.

### 1. வல்லமையுள்ள குடும்பம்
(Powerful Family)

எது வல்லமையுள்ள குடும்பம் என்றால், கணவன் மனைவியினிடையே ஒருமனம், பெற்றோர்கள் பிள்ளைகளிடையே ஒருமனம் எந்தக் குடும்பத்தில் இருக்கின்றதோ அதுவே வல்லமையுள்ள குடும்பம். கணவன் ஒரு திசை, மனைவி ஒரு திசை, பிள்ளைகள் ஒரு திசை இப்படி ஒருமனமற்ற குடும்பம்

***Powerless Family***. சபைக்குத் தலையாக இயேசு இருப்பதுபோல் ஒரு வீட்டுக்குத் தலைவன், அதிகாரி, ஆசாரியன் கணவன். அந்தக் கணவனோடு மனைவி ஐக்கியப்பட வேண்டும், மனைவியோடு கணவன் ஒருமனதைக் காத்துக்கொள்ள வேண்டும். முன்பெல்லாம் குடும்ப ஜெபத்தை அதிகமாக வலியுறுத்திச் சொல்வேன். கிறிஸ்தவக் குடும்பங்களில் உள்ள பிரச்சனைகளைப் பார்க்கும்பொழுது குடும்ப ஜெபம் மட்டுமல்ல, கணவனும் மனைவியும் மட்டும் தனியாக பிள்ளைகளுக்காக மற்றும் குடும்ப சம்மந்தப்பட்ட அனைத்துக் காரியங்களையும் திறந்த மனதோடு ஆண்டவரிடம் ஜெபியுங்கள் என்று கட்டாயப்படுத்திச் சொல்கிறேன். ஊழியத்தின் நிமித்தம் பல இடங்களுக்கு நான் பிரயாணம் செய்தாலும், ஊரில் வீட்டில் இருக்கும்பொழுது நானும், என் மனைவியுமாக இணைந்து வேதம் வாசித்து, ஆண்டவரைத் துதித்து ஜெபிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். எனவே நாங்கள் இருவரும் சமாதானமாக இருக்கின்றோம். அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று மத்.18:19ல் இயேசு சொல்கிறார். இந்த வசனத்தில் இருக்கிற இரண்டுபேர் யார் என்றால், அது கணவன், மனைவி என்று மறைந்த பாஸ்டர் சுந்தரம் சொல்வார்கள். அவர் மனைவியோடு முழங்கால்படியிட்டு, கைகோர்த்து ஒருமனப்பட்டு ஜெபிக்கும் பழக்கமுடையவர். உங்களுக்கு ஒரு காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன், கணவனும் மனைவியும் தங்கள் இள வயதில் ஒன்றாக இருக்கலாம், ஒன்றாக ஜெபிக்கலாம்; ஆனால் பிள்ளைகள் பிறந்த பின் வயதான பின் அது போல இருக்கக்கூடாது என்ற துர்உபதேசம் பரவி வருகிறது. அப்படிச் செய்யலாகாது. கணவன் மனைவி என்ற உறவு ஆண்டவர் உண்டாக்கியது. அவர்கள் பிரியக்கூடாது என்று 1 கொரி. 7ம் அதிகாரத்தில் உள்ளது.

எனக்கும், என் மனைவிக்கும் ஒரு மனம் கிடையாது என்று சொல்வீர்களானால், நீங்கள் இருவரும் தேவ சமூகத்தில் முழங்கால் படியிட்டு ஜெபித்துப் பாருங்கள். சமாதானம் வந்துவிடும். இதை நான் உறுதியாகச் சொல்கிறேன். குடும்பத் தலைவன் அந்தக் குடும்பத்தைக் குறித்து உத்திரவாதம் உள்ளவராக இருக்க வேண்டும். சில குடும்பங்களில் கணவன், எல்லாவற்றையும் நீ பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டுக் குடும்பத்தைக் குறித்த அக்கரை இல்லாதவர்களாக இருப்பார்கள். ஒரு கம்பெனியில் ஏதாவது தவறு நடந்தால், அதற்குப் பொறுப்பாளர் யாரோ, அவரைத்தான் கேள்வி கேட்பார்கள். அதுபோல் குடும்பத்திற்கு, அக்குடும்பத்தின் தலைவனே பொறுப்பு. போதகர்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் எடுத்து ஜெபித்து, விசாரித்து, சபையை நடத்துவது போல, ஒரு வீட்டிற்கு அந்தக் குடும்பத் தலைவனே உத்தரவாதமுள்ளவர். கணவனும் மனைவியும் ஒருமனதுள்ளவர்களாக இருக்க வேண்டும். இருவரும் இணைந்து பிள்ளைகளைச் சரியான வழியில் நடத்த வேண்டும். ஒன்றாக இணைந்து ஜெபிக்கும் குடும்பம் ஒன்றாய் வாழும். இதுதான் ***Powerful Family***.

## 2. பன்மையான குடும்பம்

(Plural Family)

இன்று அநேகர், ஒரு பிள்ளையோடு போதுமென்று நிறுத்தி விடுகின்றார்கள். வேதம் முழுவதிலும் பிள்ளைகளைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள் எல்லாமே "பிள்ளைகள்" என்று பன்மையாகத்தான் ***(Plural)***





சொல்லப்பட்டுள்ளது. சிலருக்கு இயற்கையாகவே ஒரு பிள்ளைக்கு மேல் இல்லை, சிலருக்குக் குழந்தையே இல்லை, அவர்களை நான் குற்றப்படுத்தவில்லை. நீங்கள் பிள்ளையோடு அல்ல பிள்ளைகளோடு இருப்பதுதான் தேவ சித்தம்.

ஒரு பிள்ளை போதும், ஒரு பிள்ளைக்கு மேல் வேண்டாம் என்று சில ஊழியக்காரர்களே சொல்லுகிறார்கள். சிலருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்பதால் ஆண்டவர் பிள்ளைகளைக் கொடுக்கவில்லை. இது தேவனுடைய அநந்த ஞானம், ஆண்டவர் சர்வ ஞானமுள்ளவர். ஆகவே இப்படிப்பட்ட விஷயத்தில் யாரைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லக் கூடாது.

ஆனால் தேவ சித்தம் பிள்ளகள் எனப் பன்மை இருப்பதுதான். வரிசையாக உடனுக்குடன் பிள்ளைகள் பெறுவது அல்ல. இன்றைக்கு அநேக பெற்றோர் உடனுக்குடன் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதால் அபார்ஷன் என்று கூட செய்து விட்டுக் குற்ற உணர்வோடு இருக்கின்றனர். செய்த பாவம் சாபமாக மாறிவிடும். இப்படிப்பட்ட காரியத்தைச் செய்திருந்தால் மனம் திரும்பி ஆண்டவர் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட அர்ப்பணியுங்கள். ஆண்டவர் மன்னிப்பார். குற்ற மனச்சாட்சியோடு இராதேயுங்கள்.

ஆண்டவருடைய கிருபையால், நான் நடத்தி வைக்கிற எல்லாத் திருமணங்களிலும் சொல்லுவேன், முதல் குழந்தைக்கு ஜெபம் பண்ணி தேவ சித்தப்படி பெற்றுக்கொள்ளுங்கள். அடுத்த குழந்தைக்கு ஜெபம்பண்ணி, திட்டமிட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். முதல் பிள்ளையை வளர்க்க காலம் எடுத்துக்கொள்ள வேண்டும். உடனுக்குடன் குழந்தை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு மனச்சாட்சியின்படியும், தேவ வசனத்துக்கு எதிராக இராதபடி மருத்துவர்களின் நல்ல ஆலோசனையின்படி செயல்படுவது நல்லது.

கருக்கலைப்பு என்பது பாவம். அது சாபத்தைக் கொண்டுவரும். அது கொலைக்குச் சமானம். ஆகவே தேவனுக்குப் பயந்து நடப்போம். அருமையானவர்களே, பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதும் தேவ சித்தப்படிக் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லேலூயா. பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் உங்கள் வீட்டில் இருந்தால் மிகவும் சந்தோஷம். பிள்ளைகளை பேரப்பிள்ளைகளைச் சொத்தாக நினையுங்கள்.

## 3. செழிப்பான குடும்பம்

(Prosperous Family)

செழிப்பான குடும்பம் என்பது கடனில்லாத குடும்பம். ஆகார நிறைவுள்ள குடும்பம். பணக் குறைவு இல்லாத குடும்பம் ஆகும். ஆண்டவர் பிள்ளைகளைக் கொடுத்து விட்டு பட்டினியாகப் போடு என்று கூறமாட்டார். பிள்ளைகளைக் கொடுத்த ஆண்டவர் பிள்ளைகளை வளர்ப்பதற்கானத் தேவைகளையும் சந்திப்பார். அருமையான பெற்றோர்களே, நாம் பிள்ளைகளைப் போஷித்துக் காப்பாற்ற வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். பிள்ளைகளின் படிப்பிற்காக, எதிர்காலக் காரியங்களுக்காக மாதந்தோறும் சேர்த்து வைக்க வேண்டும். பிள்ளைகளுக்குச் சத்தான நல்ல உணவுகளைக் கொடுக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் வெறும் ரசம், துவையல் என்று அல்ல. பாருங்கள் இந்தக் காலத்துப் பிள்ளைகள் காய்கறிகள் சாப்பிடுவதே கிடையாது. என்ன கொடுத்தால் சாப்பிடுகிறார்கள் என்றால், பொதுவாக சிக்கன் என்றுதான் சொல்லுகிறார்கள். தினமும் அசைவ உணவு கொடுக்க வேண்டும் என்பது அல்ல. தினமும் முட்டையும் கீரையும் பாலுமாகக் கட்டாயம் கொடுங்கள். பிள்ளைகள் ஆரோக்கியமாக இருந்தால் நீங்கள் மருத்துவரிடம் செல்ல வேண்டிய அவசியமில்லை.

னாலே அவன் அதரிசனமான வரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான். விசுவாசத் தினாலே முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்'' (எபி.11:24-28). *தேவனைப் பின்பற்றுவது என்பது எளிதானதல்ல, அநேகர் நினைப்பதற்கு மாறுபட்டதாகவே தேவனின் அழைப்பு இருக்கிறது.* அவர் நம்மை சந்தோஷம், சமாதானம், அன்பு போன்றவற்றிற்காக அழைத்தது உண் மையே ஆனால் அதை அடைவது எளி தானதாகவோ, சொகுசானதாகவோ இல்லை. கிறிஸ்துவின் அழைப்பும் ஏதோ வசதி, வாய்ப்புகளோடு செழிப்பாக வாழ்ந் திடுவது மாத்திரமன்றி சுயத்தை வெறுத்து தியாகமாக வாழ்வதை உள்ளடக்கியது. அது பெரும் கிரயம் செலுத்தக்கூடிய அழைப்பாகும். இதற்கு எந்த விதிவிலக்கும் இல்லை. இதனை மத். 19:16-22; 23-26; 27-30; ஆகிய பகுதிகளில் நாம் கண்ட றிந்து கொள் ளலாம். இதனை மோசேயின் வாழ்க்கையில் காணலாம் தேவனைப் பின்பற்றும்படி அனைத்தையும் விட்டுக் கொடுத்தவர் மேலும் சுயத்தை வெறுக்கக்கூடிய விசுவாசத்தை மோசேயின் வாழ்க்கையில் தெளிவுற நாம் காண முடியும். மோசேயின் விசுவாசத்தைக் குறித்து காணும்போது எபி. 11:24,25 வசனங்களில் உலகத்தின் சந்தோஷத்தை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவஜனங்களோடே துன்பத்தை அநுபவித்ததை தியாகமான விசுவாசமாகவும், எபி. 11:26-28 வசனங்களில் இனி வரக்கூடிய பலன் மேல் நோக்கமாக இருந்ததைக் காணும் போது மனிதனுக்குப் பயப்படாத, எது வந்தாலும் பரவாயில்லை என சகிக்கிற விசுவாசமாகவும் காணமுடியும்.

**1) தியாகமான விசுவாசம்:**

அனைத்து ஆண்பிள்ளைகளும் மரித்திருக்க மோசேயின் பெற்றோர் விசுவாசத்தின் மூலமாக மோசே பாதுகாக்கப்பட்டதை அறிந்திருக்கிறோம். அதன் பின் பார்வோனுடைய குமாரத்தி நதியில் கண்டு அவனை பாதுகாத்ததையும், இளம்பிராயத்தில் மோசே பெற்றோரி டமே வளர்க்கப்பட்டதையும் அதன் பின்பு அரண்மனைக்குச் சென்றதையும் அறிந்தி ருக்கிறோம். அரண்மனையில் அனைத்து வசதிகளோடு, அனைத்துத் துறைகளையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளும் கிடைத்தது. கல்வியிலும், அறிவிலும், செல்வத்திலும், செல்வாக்கிலும், வாக்கிலும் மோசே சிறந்து விளங்கினான். அத்தனையும் அவனுக்கு கிட்டியது ஆனால் மோசேயே வாக்குத்தத்தத்துக்கும் சந்ததிக்கும், வாக்குத்தத்த தேசத்திற்காகவும் அனைத்தையும் உதறித் தள்ளினார். இவ்வளவு நாட்கள் எகிப்தியனாக வாழ்ந்த அவன் இனி தேவ ஜனங்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது எளிதான காரியமன்று. பார்வோனுக்கு அடுத்த பார்வோனாக உயர் பதவியை அடைய வேண்டியவன் அதைத் தியாகத்தோடு உதறித் தள்ளினான். இதற்காக பல தீர்மானங்களை அவன் எடுக்கக் கூடியதாயிற்று. எனினும் தேவனுக்காக, தேவ ஜனங்களுக்காக அனைத்தையும் விட்டுக் கொடுத்தான். இதனை "விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டான்,'' (எபி. 11:24,25) எனக் காண்கிறோம்.

மோசே இத்தீர்மானம் எடுக்கும் போது 40 வயதாக இருந்தான். ஆகவே





யிருக்கும். தேவ ஆளுகை உண்டாகும். உங்கள் குடும்பத்தில் ஜெபத்தை அதிகப் படுத்துங்கள். உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுங்கள். நிச்சயமாக உங்கள் குடும்பத்தில் தேவ சித்தம் நடக்கும்.

### 7. துதிக்கின்ற குடும்பம்
(Praising Family)

துதிக்கின்ற குடும்பம் என்பது முறுமுறுக்காமல், குறைசொல்லாமல், குற்றம் கண்டுபிடிக்காமல் எல்லாவற்றிற்காகவும் ஆண்டவரை ஸ்தோத்திரம் செய்வது ஆகும். துதிக்கின்ற குடும்பம் என்றால், கர்த்தர் கொடுத்த கணவனுக்காக ஸ்தோத்திரம். கர்த்தர் கொடுத்த மனைவிக்காக ஸ்தோத்திரம். கர்த்தர் கொடுத்த பிள்ளைகளுக்காக ஸ்தோத்திரம். ஆண்டவர் செய்த நன்மைகளை நினைத்து அதற்காக நாம் ஆண்டவருக்கு நன்றி சொல்ல வேண்டும். எத்தனையோ பேருக்கு இல்லாத சிலாக்கியத்தை, பாக்கியத்தைக் கர்த்தர் உங்களுக்கு, உங்கள் குடும்பத்திற்கு, உங்கள் வீட்டாருக்கு, உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கின்றார். ஆகவே, அதற்காக கர்த்தரைத் துதிக்காமல் இருக்கவே முடியாது. நாம் கர்த்தரை மனதாரத் துதிக்க வேண்டும். கர்த்தர் அதில் பிரியப்படுகின்றார்.

இல்லாதவைகளுக்காக நினைத்து அல்ல. இல்லாதவைகளை நினைத்து விட்டால் முறுமுறுப்பு தான் வரும். இருக்கிறவைகளுக்காக கர்த்தரைத் துதியுங்கள். ஆண்டவருக்கு எல்லாவற்றிற்காகவும் துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் செலுத்துங்கள். ஆண்டவருக்கு எப்பொழுதும் நன்றியாக இருங்கள். ஆகவே, குடும்பம் தேவனைத் துதிப்பது என்பது தேவனுடைய சித்தம். ஆகவே, என்னுடைய உங்களுடைய நம்முடைய குடும்பங்கள் தேவனைத் துதிக்கின்ற குடும்பமாக இருக்க வேண்டும்.

ஆகவே உங்களுடைய குடும்பங்களைக் குறித்த தேவ சித்தத்தை அறிந்து, அர்ப்பணித்து, தேவ ஒத்தாசையோடு குடும்பத்தைக் கட்டுங்கள். கர்த்தர் உங்கள் குடும்பத்தில் வாசம் செய்வார், வழிநடத்துவார். அமென்.

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ரோமர்.3:34

**கிருபையும் விசுவாசமும்**

(சிறப்பு வேதபாடம்)



செய்தியாளர்
Pr.டேவிஸ்
நல்லசமாரியன் சபை,
மதுரை

நாள் அக்டோபர் 2014
14 முதல் 18 வரை
[செவ்வாய் முதல் சனி வரை]
தினமும் மாலை 6.30 மணி

இடம் அல்லேலூயா டவர்
நல்ல சமாரியன் ஆலயம்,
47, அழகர் நகர் 5வது தெரு,
கோ.புதூர், மதுரை-7.

தொடர்பு நல்ல சமாரியன் சபை, 0452-2568060

பகுதி–27

# எபிரெயர்

*Pr. S.Rajan*

## யாக்கோபின் விசுவாசம்:

‘‘விசுவாசத்தினாலே யாக்கோபு யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்’’ (எபி.11:23) தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசித்தவன் மரணம் வந்தாலும் விசுவாசத்தை விட்டு விலகவில்லை. அவன் வாக்குத்தத்த தேசத்தைக் காணவில்லை ஆனால் அதற்கு மாறாக பஞ்சத்தினிமித்தமாக முழுக் குடும்பமும் எகிப்துக்குப் போகவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனினும் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்தான். மரிக்கும் போதும் அப்படியே விசுவாசித்தான். ஆதி.48:10–6, 13–16 வசனங்களை நாம் வாசிக்கும் போது முதலாவது அவன் பூலோகத்தில் நீண்ட நாட்கள் வாழ்ந்த பின்பு மரிக்கும் தருவாயில் இருந்தான் என காண் கிறோம். அந்நேரம் தனது குமாரனாகிய யோசேப்பின் பிள்ளைகளை வரவழைத்து ஆசீர்வதித்தான். அந்தப் பிள்ளைகள் ஒரு வேளை எகிப்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் வாக்குத்தத்தின் ஆசீர்வாதங்களைக் கூறி சந்ததிக்குரிய ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்ததைக் காண்கிறோம். இது யாக்கோபின் விசுவாசத்தையே சுட்டிக் காட்டுகிறது. மேலும் மரணமடையும் காலம் சம்பவித்தபோது கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து தொழுது கொண்டான் என வாசிக்கின்றோம். அந்த வேளையில் அந்த வாக்குத்தத்த தேசத்தையும், சுதந்தரிக்கும் சந்ததியையும் விசுவாசித்தவனாக என்னை எகிப்திலே அடக்கம் பண்ணவேண்டாம், என்று கூறினான்.

ஆகவே யாக்கோபு வாக்குத்தத்த தேசத்தை காணவில்லை. அதற்கு எதிராக எகிப்திற்கு முழுக் குடும்பமும் கட்டாயம் செல்ல வேண்டிய நிர்பந்தமானது, எனினும் தனது மரணம் வரையும் கர்த்தரைத் தொழுது கொண்டான், கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்தான்.

## யோசேப்பின் விசுவாசம்:

“விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளை கொடுத்தான்’’ (எபி.11:22). சூழ்நிலைகள் அனைத்தும் எதிராக இருந்த போதும் யோசேப்பு கர்த்தரை விசுவாசித்தான். அவனது விசுவாசம் ஜீவனுள்ள விசுவாச மாக, சாத்திய மற்ற காரியத்தையும், விசுவாசிக்கச் செய்தது. யோசேப்பு இருந்த சூழ்நிலையில் வேறொருவர் இருந்திருப்பார்களென்றால் நிச்சயம் விசுவாசத்தை இழந்து போயிருப்பார்கள். அவன் கடந்து வந்த பாதைகளோ மிகக் கடினமானது. இளம் பிராயத்திலே தன் சொந்த சகோதரர்களால் பகைக்கப்பட்டு எகிப்திற்கு விற்கப்பட்டான் (ஆதி.37:23). அடிமையாகப் போத்திபார் வீட்டில் இருக்கும்போது அவன் மனைவியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து பாவம் செய்யாமல் அவளது வார்த்தையைப் புறக்கணித்ததால் நீதியினிமித்தம் தவறாக குற்றஞ் சாட்டப்பட்டான் (ஆதி.39:7) அதினிமித்தம் நெடுநாட்கள் சிறைவாசம். அந்நாட்களில் தன்மூலம் நன்மை பெற்றவனால் மறக்கப் பட்டான். இத்தனை காரியங்களும் தனக்குத் தீமை விளைவிக்கிறதாகவே நடந்திடினும் யோசேப்பு விசுவாசத்தை விட்டு விலகவில்லை.

மேலும் யோசேப்பின் விசுவாசம் சாத்தியமற்ற காரியத்தையும் விசுவாசிக்கும் படி வைத்தது. பல ஆண்டுகள் அந்நிய தேசத்திலே வாழ்ந்தாலும் தேவன் நிறைவேற்றப் போகிற வாக்குத்





தத்தத்தை அவன் மறந்து விடவில்லை. தன் சந்ததியை வாக்குத்தத்தத் தேசத்தை சுதந்தரிக்கும்படியாகவே தேவன் அழைத் திருக் கிறார் என்பதை அறிந்திருந்தார். மேலும் அந்த வாக்குத்தத்த தேசத்தை நிச்சயமாகக் கொடுப்பார் என விசுவாசித்தான். அவன் வாழ்ந்த சூழ்நிலையில் அது சாத்தியமற்ற காரியம்தான். எனினும் “யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரணமடையப்போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, நீங்கள் இந்தத் தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப் பண்ணுவார் என்று சொன்னதுமன்றி; தேவன் உங்களைச் சந்திக்கும் போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றும் சொல்லி; யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான்’’ (ஆதி. 50:24,25) என வாசிக்கிறோம். யோசேப்புக்கு இருந்த விசுவாசத்தைச் சற்றே நிதானித்துப் பாருங்கள் பிந்தின நாட்களில் அது நிறைவேறினதையும் காண்கிறோம்.

## மோசேயினுடைய பெற்றோரின் விசுவாசம்:

“மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்’’ (எபி. 11:23). மோசேயின் பெற்றோர் சாதாரண ஜனங்களாகக் காணப்பட்டாலும் அவர்களுக்குள் இருந்த விசுவாசம் மாபெரியதாகக் காண்கிறோம். எகிப்தின் ராஜா பயப்படும் அளவிற்கு தேவ ஜனங்கள் எகிப்தில் பெருகினார்கள். அவர்கள் பலுகிப் பெருகக்கூடாதென உபாயம் பண்ணினான். இதினிமித்தமாக இஸ்ரவேல் மக்களை உபத்திரவப் படுத்தினான் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் நதியிலே போட்டுவிடவும் பெண் பிள்ளைகளையெல்லாம் உயிரோடே வைக்கவும் தன் ஜனங்கள் எல்லாருக்கும் கட்டளையிட்டான் (யாத். 1:23) இதையறிந்த மோசேயின் பெற்றோர்கள் அப்படியானால் வாக்குத்தத்த தேசமும், அதை சுதந்தரிக்கும் சந்ததியும் இல்லாமற்போகும் என்பதை உணர்ந்தார்கள். தனது குழந்தையையும் நேசித்தார்கள். அதே வேளையில் தேவனையும் நேசித்தார்கள், எனவே மோசேயை காப்பாற்றினார்கள்.

மேலும் விசுவாசத்தினாலேயே ராஜாவின் கட்டளைக்கு சற்றேனும் பயப்படவில்லை. ராஜாவின் கட்டளைக்கு கீழ்படியாவிட்டால் மரணம் நிச்சயம் என்பது நன்றாக தெரியும் எனினும் தங்களது வாழ்க்கை அபாயமான நிலையில் இருந்தாலும் மோசேயை காப்பாற்றினார்கள். ஏனெனில் வாக்குத்தத்த சந்ததி வாக்குத்தத்த தேசம் இவைகளைக் குறித்த காரியம் நிறைவேறியாக வேண்டும் ஆகவே தங்களது உயிரையே அதற்க்காகப் பணயம் வைத்தார்கள். கர்த்தர் மேல் முழுமையான நம்பிக்கை கொண்டதினால் ராஜாவின் கட்டளையை இவ்விதமாக மீறினார்கள் இது மோசேயின் பெற்றோர் கொண்டிருந்த பெரிய விசுவாசமாகும்.

## மோசேயின் விசுவாசம்:

“ விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டு, இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும், கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தி

மாறிவிடவும் வேண்டும். சிலர் நீண்ட காலமாக இதையே யோசிக்கின்றார்கள், பின்னர் தங்களைப் பற்றி சுயபரிதாபத்திற்குள் வருகின்றார்கள். அப்போது இந்த மனச்சோர்வானது அடுத்த நிலையை அடைகிறது. மறைவான மனச்சோர்வு *(Masked Depression)* என இதை அழைக்கலாம். இது உள்ளுக்குள் மறைந்துகொண்டே இருக்கும், திடீரென்று ஒரு நாள் கோபமாக வெளிப்படும், பின்னர் மனச்சோர்வாக நீடிக்கும்.

இன்னும் சிலர் மனநோய் சார்ந்த மனச்சோர்வோடு இருக்கின்றார்கள். அதை ஆங்கிலத்தில் Psychotic Depression என அழைக்கின்றார்கள். சரி இவையெல்லாம் மனச்சோர்வின் வகைகள்.

மனச்சோர்வு எதன் விளைவாக வருகிறது ? பாவத்தின் விளைவாகவும் வரலாம், நாம் ஏற்கனவே பார்த்தது போல் இயல்பான சூழ்நிலைகள் மூலமாகவும் வரலாம். ஒன்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும், இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் இதை மேற்கொள்ள முடியும். லூக்கா 1:37, தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை... சங்.18:29, உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

யோனாவின் தீர்க்கதரிசனப் புத்தகத்திலிருந்து சில காரியங்களைத் தியானிக்கலாம். யோனா தேவனால் அழைக்கப்பட்ட ஒரு தேவ மனிதர். அவர் எதிர்பார்த்தவண்ணம் காரியங்கள் நடக்கவில்லை என்றவுடன் கோபம், வெறுப்பு மற்றும் மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர். யோனா 1ம் அதிகாரத்தில் யோனாவின் கீழ்ப்படியாமையைக் குறித்து வாசிக்கின்றோம். தேவனுக்குக் கீழ்ப்படியாமல், சுய விருப்பத்தை நிறைவேற்ற எதிர் திசையில் பயணம் செய்வது பாவமே. யோனா கீழ்ப்படியாததின் நிமித்தம் கப்பலில் அவரோடு கூட வந்த யாவருக்கும் பிரச்சனைதான். மனச்சோர்வின் அறிகுறியாகக் கப்பலின் கீழ்த்தளத்தில் போய் அயர்ந்த நித்திரையாயிருக்கின்றார். யோனா போக வேண்டிய இடத்திற்குப் போகாமல், கொடுத்த வேலையில் உற்சாகமில்லாமல் *(Disinterest in Life)* தூங்கிக்கொண்டிருக்கிறார். கடலின் சீற்றம் அதிகமானதினிமித்தம் யோனாவைக் கடலுக்குள் தூக்கி எறிகின்றார்கள். மீனின் வயிற்றிற்குள் போகும் போது பயந்துபோய் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகின்றான். அதன் பின் நினிவேக்குப் போய் பிரசங்கம் பண்ணுகின்றார். கடைசியாக 4வது அதிகாரத்தில் தேவனிடம் எரிச்சலோடு பேசுகிறார். யோனா 4:3ல், ... நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான். கடைசியாக அவருடைய மனச்சோர்வு அவருடைய வாழ்வை வெறுக்க வைத்தது. 9ம் வசனத்தில், நான் மரணபரியந்தம் எரிச்சலாகத்தான் இருப்பேன் என்கிறார். தேவனுக்குச் செவிகொடுத்து, தேவன் நினிவே பட்டணத்தார் செய்த நல்ல காரியங்களை ஏற்றுக்கொண்டு, தேவன் தன்னுடைய வாழ்வில் ஊழியம் செய்ய இடம் கொடுத்திருந்தால் நிச்சயமாய் அற்புதம் செய்திருப்பார். யோவான் 1:9, உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.

எனக்கிருக்கும் மனச்சோர்வினை நான் மேற்கொள்ள முடியுமா ? பிரசங்கி 9:4ன் படி உயிரோடிருக்கிற அனைவரிடத்திலும் நம்பிக்கையுண்டு; ஆம், இந்த வசனம் எத்தனை உண்மை ? ஆம், நம்மால் மேற்கொள்ள முடியும், நம்மால் முன்னேற முடியும். மனச்சோர்வினை மேற்கொள்ள வேதம் சொல்லக்கூடிய சில வழிகளை அடுத்த இதழில் பார்ப்போம்.





ஏதோ அறியாமல் தீர்மானம் எடுத்துவிடவில்லை, அல்லது உணர்ச்சி வசப்பட்டு எடுத்துவிடவில்லை. தான் செய்கிறது என்ன என்பதை நன்கு உணர்ந்தவனாகவே செய்தான். நமது வாழ்க்கையிலும் தியாகமான விசுவாசம் எனக் கூறப்பட வேண்டுமானால், கிறிஸ்துவுக்காக, அவருடைய நாமத்திற்காக நமக்கு அருமையாக காணப்படுகின்றவைகளை தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

**2) எதிர்பார்க்கும் விசுவாசம்:**

இனிவரும் பலன் மேல் நோக்கமாயிருந்து என்பதில் இருந்து மோசேயின் எதிர்பார்க்கும் விசுவாசத்தைக் காண்கிறோம். ஆபிரகாமிற்கும், அவன் சந்ததிக்கும் தேவன் செய்வேன் என வாக்குப்பண்ணியதை விசுவாசித்தான் (எபி. 11:8–10, 13–16) அவன் தேவ ஜனங்களோடு துன்பத்தை அநுபவிக்கும்படி துணிச்சலாகத் தீர்மானத்தை எடுத்தான். உலகத்தின் செல்வங்களைப் பார்க்கிலும் இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தையே பெரிதாக எண்ணினான். இஸ்ரவேல் வாக்குத்தத்த சந்ததி என்றும் அவர்கள் மூலமாகவே உலகத்தை இரட்சிக்கக் கூடிய மேசியா வருவார் என்பதை விசுவாசித்தான் அவர் தரும் நித்திய இளைப்பாறுதலை இஸ்ரவேலர்கள் சுதந்தரிப்பார்கள் என விசுவாசித்தான். ஆகவேதான் எகிப்தின் இன்பத்தைப் பார்க்கிலும் தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டான்.

**3) சகிக்கும் விசுவாசம்:**

தன்னைக் கொண்டு தேவன் விடுதலையளிக்கப் போகிறார் என்பதை அறிந்திருந்தான். ஆனால் அதற்கு முன்பதாகவே களம் இறங்கினான் எகிப்தியனைக் கொன்றான், எனினும் ஜனங்கள் மோசேயை அங்கிகரிக்கவில்லை எனக் காண்கிறோம். இதனை யாத். 2:13,15 வசனங்களில் காண்கிறோம். ராஜா அவனைக் கொல்லும்படி வழி பார்த்தான். ஆனால் மோசே எது நடந்தாலும் நடக்கட்டும் எனத் தைரியத்தோடே ராஜாவின் கோபத்திற்கு பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான் என காண்கிறோம்.

**4) இரட்சிப்பின் விசுவாசம்:**

“விசுவாசத்தினாலே முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்”(எபி. 11:28). இஸ்ரவேலரின் இரட்சிப்புக்கு ஏதுவான வழியை ஆண்டவர் கூறிய வேளையில் அதை அப்படியே விசுவாசித்தான். அடிமைத்தனத்தில் இருந்து அவர்கள் விடுதலையாகித் தேவன் கூறிய வாக்குத்தத்த தேசத்தை அடைவதற்கு முதற்படியாக பஸ்காவை விசுவாசித்து செயல்படுத்தினான். தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அவன் சந்தேகிக்கவேயில்லை. அதை அப்படியே விசுவாசித்து ஆண்டு தோறும் அதை நினைவுகூரும் படியாக பஸ்காவை ஆசரிக்கும்படிச் செய்தான்.

அன்பானவர்களே, இப்படியாக மோசேயின் விசுவாசம் தியாகமான விசுவாசமாகவும், எதிர்பார்க்கிற விசுவாசமாகவும், சகிக்கிற விசுவாசமாகவும், இரட்சிப்பை விசுவாசிக்கிற விசுவாசமாகவும் காணப்பட்டது போன்று கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நாமும் கிறிஸ்துவுக்காக, தேவ ராஜ்யத்திற்காக இழக்க நேரிடுகிறதை இழந்து தியாகத்தோடு, இப்பொழுது கிடைக்கும் நன்மைகளையல்ல இனிவரக்கூடிய நித்திய ஆசீர்வாதங்களை விசுவாசித்து அதற்காக என்ன வந்தாலும் பரவாயில்லை என சகித்துக் கொண்டு, நிச்சயம் தேவன் விடுதலை செய்வார் என இரட்சிப்பின் விசுவாசத்தை உடையவர்களாக நமது ஆவிக்குரிய ஓட்டத்தை ஓடுவோமாக.

# மனச்சோர்விலிருந்து விடுதலை

/// Pr.Simiyon ///




***Hello Friends, hope you are doing good.*** அற்புதமான ஆகஸ்ட் மாதத்தைக் கடந்து செப்டம்பருக்குள் நுழைந்து விட்டோம். எல்லாம் நன்றாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றது. ஆனால், நாட்டு நடப்பைப் பார்த்தால் அப்படி ஒன்றும் சொல்லத் தகுந்த வகையில் இல்லை. காசா போன்ற பகுதியில் நம்மைப்போன்ற வாலிபர்கள் பயத்துடனும், நடுக்கத்துடனும் இருக்கின்றார்கள். இன்னொரு பக்கம் உலகப் பிரசித்தி பெற்ற நகைச்சுவை நடிகர், ராபின் வில்லியம்ஸ் கலிபோர்னியாவில் இருக்கக்கூடிய தன் சொந்த இல்லத்தில் ஆகஸ்ட் 11ம் தேதி தற்கொலை செய்து கொண்டார். இவருடைய மறைவுக்கான காரணம் மனச்சோர்வு ***(Depression)*** என செய்தித்தாளில் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. உலகையே தன்னுடைய நகைச்சுவை நடிப்பினால் சிரிக்க வைத்தார், ஆனால் தன்னுடைய வாழ்க்கையில் சிரிப்பு இல்லை. இம்மாதிரியான செய்திகளைத் தெரிந்துகொள்ளும்போது, திரையில் வரக்கூடிய கதாபாத்திரங்களின் உண்மை வாழ்வும் இப்படித்தான் இருக்குமோ என்ற கேள்வி வருகிறது. மனித வாழ்வு சாய்ந்துபோகும் நிழலுக்கு ஒப்பாயிருக்கிறது என வாசிக்கின்றோம். அதே நேரத்தில், நம்முடைய வாழ்வை நம்மால் enjoy பண்ண முடியும். ஆனால், நாம் இரட்சிக்கப்பட்டு கர்த்தருக்குள் இருந்தால், நாம் சந்தோஷமாய் நம்முடைய வாழ்வை அநுபவிக்க முடியும்.

சிலர், நான் மனச் சோர்விலிருந்து மீள முடியுமா ? மன நிறைவுடன் வாழ முடியுமா ? என்று கேட்கிறார்கள். மனச்சோர்வாகிய கார்மேகம் மாற முடியும். சங்.42:5,6,11 மற்றும் சங்.43:5 இம்மூன்று இடங்களிலும் ஒரே வசனத்தைத்தான் தாவீது மறுபடியும் மறுபடியும் சொல்லுகின்றார். அவருக்குக் கிடைக்கக்கூடிய பதிலும் ஒன்றுதான். “நான் இன்னும் கர்த்தரைத் துதிப்பேன்”. இதை வாசித்துக் கொண்டிருக்கும் அருமையான வாலிபர்களே, நீங்கள் மனச் சோர்வோடு இருக்கின்றீர்களா ? மனச் சோர்விலிருந்து மீள, வேதத்தின் அடிப்படையில் சில காரியங்களை உங்களுக்கு எழுதுகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய வாலிபர்கள் பலர் சினிமா நடிகர்கள் பலரை திரையில் பார்த்து அது தான் உண்மை என்று நம்பி அவர்களைப் போல் உடை உடுத்திக் கொள்வது, அவர்களைப் போல் ***hair style*** வைத்துக் கொள்வது என்று தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். பல வாலிபர்கள் மனச் சோர்விலும் இருக்கிறார்கள். எனவே தான் வாலிபர்களாகிய உங்களுக்கு இந்த மனச்சோர்விலிருந்து எப்படி விடுபடுவது என்று எழுதுகிறேன்.

முதலாவதாக மனச்சோர்வு என்றால்





என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இருதய வடிவில் அமைக்கப்பட்ட ஒரு ரப்பர் தலையணையின் ***(Foom Rubber Pillow)*** மீது கனமான இரும்புத் துண்டு ஒன்றை வைத்தால் தலையணை கீழாக நசுக்கப்படும். அப்படியே அழுத்தப்பட்ட நிலையிலே தலையணை இருக்கும். மறுநாள் அந்த இரும்புத் துண்டை எடுத்துவிட்டால், தலையணை பழைய வடிவிற்கு வந்துவிடும். உதாரணமாக அந்த இரும்புத் துண்டை அப்படியே விட்டு விட்டு ஆறு மாதத்திற்குப் பிறகு எடுத்தால் தலையனை பழைய வடிவை திரும்பவும் பெறாது. இரும்புத் துண்டு அழுத்தின இடம் தட்டையாகிவிடும்.

ஒரு மனித இருதயத்திற்கும் இது பொருந்தும். இயல்பான சூழ்நிலைகளின் காரணமாக, இயல்பான அழுத்தம் கொடுக்கப்பட்டால் (சூழ்நிலையைச் சார்ந்த மன அழுத்தம்) அந்த அழுத்தம் அகற்றப்படும்போது அது பழைய நிலையினை அடையும்படி தேவன் அதை வடிவமைத்திருக்கின்றார். ஆனால் மிகவும் பாரமான அழுத்தத்தின் கீழாக நீங்கள் நீண்ட காலம் வாழ்ந்து கொண்டிருப்பீர்களானால், உங்கள் இருதயம் “மனக் கிலேசம்” ***(Depresion)*** என்கிற நிலைய எட்டிவிடும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மைப் பற்றி அக்கரையுள்ளவராய் இருக்கின்றார். நம்முடைய இருதயம் பாரமடையும் போது நாம் பாதிக்கப்படுவோம் என்பதை அறிந்து எச்சரிக்கின்றார் (லூக்கா 21:34) “உங்கள் இருதயம் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லௌகீகக் கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும் .... எச்சரிக்கையாயிருங்கள்.

* மனச்சோர்வு என்பது நல்ல நிலையில் இருந்து கீழான நிலைக்குத் தள்ளப்படுவது
* மனச்சோர்வு என்பது உள்ளான மனிதனில் பாரமான உணர்வைக் கொடுக்கும்
* மனச்சோர்வு என்பது அநுபவிக்க முடியாத நிலைக்கு நம்மைத் தள்ளிவிடும்
* மனச்சோர்வு என்பது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தையும் பாதித்துவிடும்

என்னுடைய மனைவி Dr. மஞ்சுளா சிமியோன் அவர்கள் மனநல மருத்துவராக இருப்பதினால், அவர்கள் என்னோடு பகிர்ந்துகொள்ளும் காரியங்களில் சில இந்தக் கட்டுரையில் இணைத்துள்ளேன். இன்றைய வாலிபர்களும், முதியவர்களும் ஏன் ***Robin Williams (Hollywood Comedian)*** போன்ற உயர் வகுப்பினரும் இப்படிப்பட்ட மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர். இதிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். அதனால் இந்தக் காரியங்களைப் பகிர்ந்துகொள்கிறேன்.

இயல்பான மனச்சோர்வு பலருக்கும், சூழ்நிலைகள் நிமித்தமாக வருகிறது. நாம் அநுதினமும் சந்திக்கக்கூடிய பிரச்சனைகள் உண்டு. உதாரணமாக புறக்கணிக்கப்படுதல், தோல்விகளைச் சந்தித்தல், நமக்கு ஏற்படும் சுகவீனத்தின் நிமித்தமாகவும் இந்த இயல்பான மனச்சோர்வு உண்டாகிறது. உதாரணமாகப் பாருங்கள், வாலிபர்கள் வேலை தேடி Interviewக்குப் போகிறார்கள், ***“You are not selected”*** என்ற செய்தி வந்தவுடன் இடி விழுந்தது போல் உடைந்து போகின்றார்கள். ***It is like a failure for them.*** நன்றாய் யோசித்துப் பாருங்கள், இந்தத் தோல்வி நீடிக்கப்போவதில்லை. நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாயிருக்கிறதினிமித்தம், இதைவிடப் பல மடங்கு நல்ல நேர்த்தியான வேலையைக் கர்த்தர் கொடுப்பார். நாம் சந்திக்கக்கூடிய தோல்விகள் எல்லாம் ஜெயமாய் மாறும் மறந்துவிடாதிருங்கள். ரோமர் 8:28, இப்படிப்பட்ட மனச்சோர்வுகள் நீண்ட காலமாய் இருப்பது கிடையாது. இது சீக்கிரம் மாறிவிடும்,

எவ்வளவுதான் காதில் விழுந்தாலும்அது எந்தவித உணர்வையும், வாழ்க்கையில் மாறுதலையும் ஏற்படுத்தாது. சத்தியத்தைக் கேட்டு உணர்கிற ***(Sensitive ears)*** காதுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏழையின் கூக்குரலுக்கு தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவர்களும் செவிடர்கள்தான் (நீதி.21:13). அப்படிப்பட்டவர்கள் தங்கள் ஆபத்துக் காலத்தில் உதவிக்காகக் கூப்பிடும்பொழுது அவர்கள் கேட்கப்படமாட்டார்கள். உதவி தேவைப்படுவோரைப் பார்த்தும் பார்க்காததுபோல் நாம் நடப்பது நல்லதல்ல. ஏழையின் கூக்குரலுக்குச் செவி கொடுக்கும் இரக்கமுள்ளவர்களாய்க் காணப்படுவோம்.

**விருத்தசேதனமற்ற காதுகள்:**

கர்த்தருடைய வசனத்தைக் கேட்க விருப்பமில்லாத காதுகள்தான் விருத்ததேனமற்றது என்று எரேமியா **6:10**இல் கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு கர்த்தரது வசனம் நிந்தையாயிருக்கும். அப்.**7:51**இன்படி பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்பவர்களும் விருத்தசேதனமில்லாத செவிகளை உடையவர்கள் என்று பார்க்கிறோம். பிரியமானவர்களே, நமக்கு வசனம் இரவும் பகலும் தியானமாயிருக்கின்றதா? வசனங்களைத் தெளிதேனிலும் மதுரமாக ருசித்து கேட்கிறோமா, வாசிக்கின்றோமா? வாழ்க்கையில் அப்பியாசப்படுத்துகிறோமா? அப்பொழுதான் அவை நமக்கு ஆசீர்வாதங்களாக அமையும்.

**செவித்திணர்வுள்ள காதுகள்:**

(Itching ears)

நம்மில் சிலருக்குப் புரணி பேசுவது, அதைக் கேட்பதென்றால் அலாதி விருப்பம். மற்றவர்களைப் பற்றிய மோசமான செய்திகளைக் கேட்பதில் அதிகம் ஆர்வம் காட்டுவார்கள். ஒரு கெட்ட செய்தி எவ்வளவு அதிகமாகப் பரவுகிறது என்று பாருங்கள். அதே நேரத்தில் அவர் செய்த நல்ல காரியங்கள் 1000 இருந்தாலும்அது யார் காதுகளுக்கும் சென்று அடைவதில்லை. பவுல் தீமோத்தேயுவுக்கு (2தீமோ.4:3,4) எழுதும்பொழுது சிலர் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாதவர்களாய் தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைச் சேர்த்துக்கொண்டு சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போவார்கள் என்று எச்சரிக்கின்றார்.

நாம் விரும்புவதைத்தான் நம் காதுகள் கேட்கும். ***We hear what we want to hear and see what we want to see. We have the capacity for selective hearing.*** தேவையற்றவைகளைக் கேட்காது நல்லவற்றை மட்டும் கேட்கும் கட்டுப்பாடு நம் கையிலிருக்கிறது. சில நேரங்களில் ஆபாசமான சினிமா பாடல்கள் நம் காதுகளில் வந்து விழுந்தாலும் அவற்றைக் கேட்காது மனதைக் கட்டுப்படுத்தி வேறு நல்ல காரியத்தில் நமது கவனத்தை செலுத்துவது என்பது ஆவியானவரின் துணையோடு நம்மால் முடியும். இடறலுண்டாக்கும் காரியங்களுக்கு செவியை அடைத்து நல்லவற்றிற்கு செவியைத் திறந்து வைக்க தேவன் நமக்கு உதவி செய்வார். செவியழகு என்னவென்று இப்பொழுது ஓரளவு புரிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். தேவனுடைய பார்வையில் நாம் அழகுள்ளவர்களாய்க் காணப்பட தேவன் கிருபை செய்வாராக. ஆமென்.





# அழகும் அலங்கரிப்பும்

## செவிகளின் அழகு

பகுதி-9

/// Mrs. Nirmala Jeyaraj ///

கிறிஸ்துவிற்குள் அன்பானவர்களே, நம்முடைய இயேசு ஜீவிக்கிறார் பத்திரிக்கையின் வாயிலாக மறுபடியும் உங்களோடு "அழகும் அலங்கரிப்பும்" என்ற தலைப்பின் கீழ் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை அருளின தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். இந்த மாதத் தலைப்பான 'செவிகளின் அழகு' என்ற கருப்பொருளில் தேவன் கற்றுக் கொடுக்கும் சில கருத்துக்களை வேதத்தின் அடிப்படையில் சிந்திப்போம். கடந்த மாதம் கண்களின் அழகைப்பற்றி பார்த்தோம். கேட்கிற காதும் காண்கின்ற கண்களும் தேவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட விசேஷித்த அவயவங்கள். நம் செவிகள் எவ்வாறு அழகுள்ளதாக, பயனுள்ளதாக செயல்பட வேண்டும், எவ்வாறு இருக்கக்கூடாது என்பதைக் குறித்து விரிவாக தியானிப்போம்.

**செவிகளின் அலங்காரம்:**

பொதுவாக உலக வழக்கத்தில் மனிதர்கள் தங்கள் காதுகளை அலங்கரித்துக் கொள்வது எல்லா கலாச்சாரத்திலும் பழக்கமாக உள்ளது. குழந்தை பிறந்து சில மாதங்களுக்குள்ளாகவே காதுகளில் துளையிட்டு காதணி அணிவிப்பதை ஒரு பெரிய விழாவாகவே கொண்டாடுவர் நம் தமிழ் மக்கள். மிகவும் எளிய குடும்பத்தில் கூட நகைகள் வாங்க வசதியில்லாத நிலையிலும் காதுகளிலும் ஒரு சிறிய கம்மலாவது தங்கத்தில் செய்து அணிவது வழக்கமாகி விட்டது. காது மடலில் ஒன்று அல்ல பல துளைகளையிட்டு வரிசையாகப் பலவித அலங்கார அணிகலன்களை மாட்டுவது பழங்குடியினர் ***(Tribal)*** கலாச்சாரம் மட்டுமல்ல, நன்கு படித்தவர்களும் பின்பற்றும் நாகரீகமாக மாறிவிட்டது. பழங்காலங்களில் கிராமப்புற பெண்கள்தான் காது வளர்த்து பெரிய ஓட்டை உண்டு பண்ணி அதில், தங்க ஆபரணங்களைத் தொங்கவிடுவது வழக்கம். அதுவும் இப்பொழுது மறைந்து வருகிறது. இஸ்ரவேல் மக்களிடமும் காதணி அணியும் வழக்கமிருந்ததாக வேதத்தில் வாசிக்கின்றோம். பொன் கடுக்கன்களைக்கொண்டு வரச்சொல்லி அவற்றையெல்லாம் சேர்த்து உருக்கி ஒரு கன்றுக் குட்டியாக உருவாக்கி ஜனங்களைப் பாவம் செய்ய வைத்த ஆரோனை நாம் மறந்துவிட வேண்டாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு அடிமை, குறித்த ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை பெற்றுச் செல்ல மனதில்லாதவனாய் எஜமானோடு தங்கவிரும்பினால் அவன் காதுகளில் அடையாளமாகத் துளையிடுவது வழக்கமாக இருந்தது (யாத்.21:6). அது அவன் வாழ்நாளெல்லாம் அந்த எஜமானனுக்கே உரிய அடிமை என்பதற்கு அடையாளமாகக் கருதப்பட்டது. ஆனால், தேவன் செவிகளைப் படைத்ததின் நோக்கம் துளையிடுவதற்கோ, பற்பல ஆபரணங்களை அணிவதற்கோ அல்ல. செவிகளால் கேட்டு இருதயத்தில் உணர்ந்து தேவனுக்குப் பிரியமானவளாய் வாழ்வதையே தேவன் விரும்புகிறார். செவிகளின் உபயோகத்தைப் பற்றி வசனம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

## கர்த்தரின் சத்தம் கேட்கும் செவிகள்:

“சாமுவேலே, சாமுவேலே” என்று கூப்பிட்ட தேவனின் மெல்லிய சத்தத்திற்கு செவிகொடுத்தக் குட்டி சாமுவேல் நமக்கு ஒரு முதன்மையான எடுத்துக்காட்டு. “பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும் ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்” என்று சவுலுக்கு சாமுவேல் சொன்னது நினைவுக்கு வருகிறது. இரட்சிப்புக்கு முதல்படி கர்த்தருடைய சத்தத்தை, அவரது வார்த்தைகளை காது கொடுத்து கேட்டல் ஆகும். விசுவாசம் கேள்வியினால்தான் வரும். கேள்வி தேவனது வசனங்களைக் காது கொடுத்து கேட்டால்தான் வரும். இரண்டாவது படி கேட்ட வசனங்களை விசுவாசித்தல். மூன்றாவதுபடி அதற்குக் கீழ்ப்படிதல். இரட்சிக்கப்படுவதற்கு இந்த மூன்றும் அவசியம் (ரோமர் 10:17,9). செவி கொடுத்தல் அல்லது செவி சாய்த்தல் என்பது காதால் கேட்பதை மட்டும் குறிக்காது. கேட்ட சத்தியத்தின்படி நடப்பதையும் உள்ளடக்கியது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மேலும், அவரது பிள்ளைகள் என்னும் தகுதி அதிலுள்ள அனைத்து ஆசீர்வாதங்களும் அவர் சத்தம் கேட்பவர்களுக்குத்தான் கிடைக்கும். யோவான் 10ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். மேய்ப்பனாகிய இயேசுவின் குரல் கேட்டு அதன்படி நடக்கும் ஆடுகளாக நாம் எப்பொழுதும் அவர் சத்தம் கேட்டு அவர் பின் செல்ல அழைக்கப்படுகிறோம். மேய்ப்பன் பின் செல்லும் ஆடுகளுக்குத்தான் நல்ல பசும்புல் மேய்ச்சல், அமர்ந்த தண்ணீர், இளைப்பாறுதல், கோலினால் தேற்றப்படுதல், பாதுகாப்பு அனைத்தும் கிட்டும். மேய்ப்பனின் குரல்கேட்கும் சின்ன ஆடுகளாக நாம் காணப்படுவோமா ?

மேய்ப்பனின் சத்தம் நமக்கு எவ்வாறு கேட்கும் ? நேரிடையாக ஒருசிலருக்கு ஒரு சில நேரங்களில் கர்த்தர் பேசும் சத்தம் காதுகளில் கேட்கலாம். ஆனால், பெரும்பாலும் நமக்குள் வாழும் பரிசுத்த ஆவியானவர் நமது ஆவிமனிதனின் உள்ளுணர்வு மூலம் நமக்கு உணர்த்துவார். வசனங்களை ***‘Rhema’*** ரேமா–வாகத் தருவார். பிரசங்க வார்த்தைகள் மூலம் நம்மோடு பேசுவார். வாழ்க்கையில் சாதாரண ஒரு நிகழ்வு மூலம் கூட நமக்கு உணர்த்துவார். கனவின் மூலம் வெளிப்படுத்துவார். நாம் மட்டும் எப்பொழுதும் அவருடன் உள்ள தொடர்பைத் துண்டிக்காது ***(alive & alert)*** கவனமாக நடந்தால் அவர் பேசுவதை வழிகாட்டுவதை உணரமுடியும். ஏசாயா 30:21இல் சொல்லப்பட்டது போல வழி இதுவே இதில் நடவுங்கள் என்று சொல்லும் வார்த்தைகளை உணரக்கூடிய தீட்சண்யமுள்ள ***(Sensitive Heart & ears)*** செவிகள் நமக்கு இருந்தால் போதும். வலது புறம் இடது புறம் பாதை தவறிச் செல்லமாட்டோம்.

## தீவிரமாய்க் கேட்கும் காதுகள்:

கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்கும்படி பவுல் எழுதுகின்றார். மான்கள் நீரோடைகளை வாஞ்சிப்பது போல நாம் வேத வசனங்களைக் கேட்க தாகமுள்ளவர்களாய்த் தீவிரமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். அப்படியானால், அதற்கு முயற்சிகள், பிரயாசங்கள் எடுக்க வேண்டும். வசனம் கிடைக்கக்கூடாத பஞ்சகாலத்திற்கு முன்பு இருதயமாகிய பொக்கிஷசாலையில் வசனமாகிய தானியங்களைச் சேர்த்து வைக்கும் ஞானத்தை (நீதி.18:15) தேவன் நமக்குத் தந்தருளுவாராக.





## புத்திமதிகளை விரும்பும் செவிகள்:

காதுகளில் வைரத்தோடு அணிவதுபோன்றது கடிந்து கொள்ளுதலையும் புத்திமதிகளையும் ஏற்றுக்கொள்ளுதல் என்று சாலொமோன் ஞானி எழுதிவைத்துள்ளார் (நீதி.15:31, 22:12). ஞானமுள்ளவர்களின் செவிதான் கடிந்து கொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும். இக்காலத்தில் உதட்டளவில் வஞ்சகமாகப் புகழ்கிறவர்கள்தான் அநேகர். அவர்கள் புகழ்ச்சியில் மயங்கி நாம் ஏமாந்துவிடக்கூடாது. உண்மையில் கரிசனையுள்ளவர்கள், நம் நலனை விரும்பும் தேவன்புள்ளவர்கள், நமக்குப் புத்தி சொல்லி சிலவேளைகளில் கடிந்து கூடச் சொல்வார்கள்.

சாதாரணமாக நமக்கு அப்படிப்பட்ட ஆலோசனைக் கேட்பதோ, அவர்கள் எச்சரித்துச் சொல்லும் புத்திமதிகளை ஏற்றுக்கொள்வதோ மிகக்கடினம். நம்மில் உள்ள பெருமை,அகந்தை, இறுமாப்பு போன்ற மாமிசத்தன்மை அதற்கு இடம் கொடுப்பதில்லை. ஆனால், ஆவியின்படி நடக்க வேண்டிய நாம் நம்மைத் தாழ்த்தி புத்திமதிகளை ஏற்றுக் கொள்ளும்பொழுது, அதுதான் நம் காதுகளில் அணியும் பொற்கடுக்கன்களும் அபரஞ்சிப்பூஷணமும் என்று வேதம் சொல்லுகிறது. இப்பொழுது சொல்லுங்கள், நம்மில் எத்தனை பேர் இந்த ஆவிக்குரிய ஆபரணங்களை அணிந்து கொண்டிருக்கிறோம் ? நீதிமான் கடிந்து கொள்வது நம் தலைக்கு எண்ணெய் அபிஷேகமாய் இருப்பதாக. பாம்பாட்டியின் இசைக்கு செவியை அடைத்துக் கொள்ளுகிற விரியன் பாம்புபோன்று யாராலும் திருத்த முடியாத முரட்டாட்டமுள்ளவர்களாக ***(unteachable)*** நாம் இருத்தல் கூடாது.

## ஞானமுள்ள செவிகள்:

கேட்கிறதற்குத் தீவிரமாய் இருந்தால் மட்டும் போதாது, கேட்பவற்றைச் சோதித்து நலமானதை அறிந்து கொள்ள வேண்டும் (யோவான் 12:11). சிலர் அங்கு மிங்கும் ஓடி, பல போதனைகளையும் கேட்டு கடைசியில் ஒன்றிலும் நிலை நிற்கமுடியாமல் தவறிவிடுகின்றனர். அப்படியல்ல, ஆவியானவரின் ஒத்தாசையோடு கேட்பவற்றை நிதானித்து, தனித்து ஆண்டவர் சமுகத்தில் அமர்ந்து தியானித்து, நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். தவறான போதனைகளால் இழுப்புண்டு போகிற இந்தக் கடைசிக் காலங்களில் நாம் கவனமாயிருத்தல் அவசியம். இதில் பெண்களாகிய நமக்கு அதிக ஞானம் தேவை. 2 தீமோ.3:7ல் சொல்லப்பட்ட பெண்களைப் போல நாம் நடவாது, இயேசுவின் தாயாகிய மரியாளைப்போல இருதயத்தில் வைத்து சிந்தித்து (லூக்கா 2:19,51) சரியாய் செயல்படுவோமாக.

இதுவரை அழகான பயன்தரக் கூடிய செவிகளைப் பற்றிப் பார்த்தோம். எவை அழகற்ற பயனற்ற செவிகள் என்றும் பார்க்கலாம்.

## செவிடும் மந்தமுமான காதுகள்:

இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்த நாட்களில் அநேக காது கேட்காத செவிடர்களை குணமாக்கியதை வேதத்தில் வாசிக்கின்றோம். நம்மில் பலருக்கு காதுகள் இருந்தாலும் சரீரப் பிரகாரமாக நன்கு செயல்பட்டாலும், ஆவிக்குரியவற்றை அறியமுடியாத மந்த ***(Dull)*** காதுகளாயிருக்கின்றன.மத்தேயு 12:14இல் இப்படிப்பட்ட செவிகளைப் பற்றி காதாராக் கேட்டும் உணராத மந்தமான செவிகள் என்று குறிப்பிட்டுள்ளது. இப்படிப்பட்ட மந்த செவியுள்ளவர்களாய் நாம் இருந்தோமானால் ஆவிக்குரிய சத்தியங்கள்

# பிரசங்கக் கலை

*Pr.L.Jebaraj*

பகுதி-1

அன்பு தேவனுடைய ஊழியர்களே, 'பிரசங்கம்' என்பது மக்களுக்கு தேவனுடைய வார்த்தையைத் தேவனிடத்திலிருந்து பெற்று, மக்களுக்குக் கொடுப்பதாகும். பிரசங்கத்தின் மூலம் தேவனுடைய வார்த்தையைக் கொடுக்கின்ற ஒரு மாபெரும் பணியை கர்த்தர் ஊழியர்களாகிய உங்களுக்கும், எனக்கும் கொடுத்திருக்கின்றார். 'பிரசங்கம்'என்கின்ற காரியத்தினை ஊழியர்கள் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். பிரசங்கத்தை ஒரு கடமையாக எடுக்கக்கூடாது. ஞாயிற்றுக் கிழமை என்றால் 'கண்டிப்பாகக் கொடுக்க வேண்டிய ஒரு செய்தி' என்று எடுக்கக் கூடாது. மக்களை மனதில் வைத்து உங்களுடைய பிரசங்கம் இருக்க வேண்டும். கடமையை கழித்து விட்டுப் போவது பிரசங்கம்அல்ல.

இப்பொழுது நமக்கு ஒத்தவாக்கியம் என்கின்ற அகராதி இருக்கின்றது. அதில் ஏதாவது ஒரு எழுத்தை எடுத்து பிரசங்கம் தயார் செய்யக் கூடாது. அது பிரசங்கம் அல்ல. பிரசங்கத்திலே ஜனங்களுடைய வாழ்க்கைக் கட்டப்பட வேண்டும். ஜனங்கள் மறுரூபமாக வேண்டும். ஜனங்களுடைய கேள்விகளுக்குப் பதில் கொடுக்கப்பட வேண்டும். ஜனங்களுடைய எண்ணங்கள் புதிதாக்கப்பட வேண்டும். ஜனங்களுடைய தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு அந்த வல்லமை இருக்கின்றது.

**வசனத்தினுடைய சாரம் நமது இரத்தத்தோடு கலக்க வேண்டும்:**

ஜனங்களுடைய வாழ்க்கை மாற்றப்பட வேண்டுமானால், ஜனங்களுடைய மனது புதிதாக வேண்டுமானால், ஜனங்களுடைய தேவை சந்திக்கப்பட வேண்டுமானால், ஜனங்களுடையக் கேள்விகளுக்குப் பதில் கொடுக்கப்பட வேண்டுமானால், நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு பல மணி நேரங்கள் செலவிடவேண்டும். தேவனுடைய வார்த்தையோடு உங்கள் ஆவி, ஆத்துமா அப்படியே மூழ்கிவிட வேண்டும். வார்த்தையும் நீங்களும் ஒன்றோடொன்று கலக்க வேண்டும். ஒரு நோக்கத்தோடு காலத்தையும், நேரத்தையும் செலவழிக்க வேண்டும். அதுதான் நம்முடைய செயலாக (தொழிலாக) இருக்க வேண்டும். இது மிக மிக முக்கியமான காரியம். பல மணி நேரம் தேவனோடு செலவழித்து, தேவனுடைய வார்த்தையோடு செலவழித்து வார்த்தையும் நாமுமாய் ஒன்றோடொன்று கலந்து வெளிவருவதுதான் பிரசங்கம்.

ஆகவே, வேத வார்த்தையைத் தியானிக்க வேண்டும். ஊழியர்கள் வேதத்தைத் தியானிக்கின்ற மனிதர்களாக மாற வேண்டும். வசனத்தினுடைய சாரம் நமது இரத்தத்தோடுகூட கலக்க வேண்டும். ஊழியம் என்பது ஒரு விளையாட்டு அல்ல, வார்த்தையைக் கேட்க வந்திருக்கின்ற 5 பேரோ, 15 பேரோ, 50 பேரோ, 500 பேரோ, 5000 பேரோ தேவைகளோடு கூட வந்து உட்கார்ந்திருக்கின்றார்கள். ஜனங்கள் தேவனிடத்திலிருந்து தனக்கு ஏதோ ஒன்று கிடைக்கும் என்றுதான் வந்து உட்கார்ந்திருக்கின்றார்கள்.

ஆகவே, கடமையைக் கழிக்கின்ற மாதிரி, செய்தித்தாளை படித்துவிட்டு வருபோல் கடந்த வார செய்திகளை எல்லாம் அறிவிப்பது போல் பிரசங்கம் இருக்கக் கூடாது. **தேவனுடைய ஊழியர்கள் செய்தி அறிவிப்பாளர்**





# தாய்மை

*Pr. Joshua Estove, Rameswaram*

பகுதி-14

கூழாங்கல்லுக்கு ஏற்ற துணையாக இருக்கும்படிப் படைக்கப்பட்ட ஒன்று தான் கவண். இந்தக் கவணின் துணையானது கூழாங்கல்லுக்குக் கிடைக்கும் பொழுதுதான் அரக்கனை வீழ்த்தும் பேராற்றலானது தேவனுடையக் கரத்திலிருந்து புறப்பட்டு அதின் வழியாக முழு அளவில் வெளிப்பட ஆரம்பிக்கின்றது.

கர்த்தரின் கரத்திற்குள் பேராற்றல் மறைந்திருக்கின்றது. ஆனால், அது வெளிப்பட அவருக்கு வெறுமனே ஒரு கூழாங்கல் கிடைத்தால் மட்டும் போதாது. அவரது பேராற்றலானது அந்தக் கூழாங்கல் வழியாக முழு அளவில் வெளிப்பட வேண்டுமானால், அதை வைத்து எறிவதற்கு ஒரு கவணும் அவருக்கு மிக மிக அவசியம். சில விஷயங்கள் ஒரு மட்டத்திலிருந்து அடுத்த மட்டத்திற்குள் கடந்துச் செல்ல வேண்டுமானால், ஏற்றதொரு துணையின் பங்களிப்பானது அவைகளுக்கு மிக முக்கியமாகத் தேவைப் படுகின்றது. தனியாயிருந்த மனிதனுக்குத் தேவன் ஒரு ஏற்ற துணையை உண்டாக்கியதின் நோக்கம் இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

திருமணமாகியும் தன் மனைவியுடன் இசைந்திருக்க மறுக்கும் ஒரு தனி மனிதன் என்னதான் தேவனோடு தனித்து உறவாடினாலும், அவனைக் கொண்டு தேவனால் பெரிதாக எதையும் சாதிக்க முடியாது. அது தண்டின் துணையில்லாமல் படகை வெறுமனே கையினால் வலிப்பதற்குச் சமம் ஆகும். அதே நேரத்தில் தனக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்ட தன் மனைவியோடு இசைந்திருக்கும் ஒரு மனிதனோடு ஜீவனுள்ள தேவன் இணையும் பொழுதோ, அவரது பேராற்றலானது அந்த மனிதன் மூலமாக அபரிமிதமாக வெளிப்பட்டு மாபெரும் அரண்களை நிர்மூலமாக்கிவிடுகின்றது.

'நான் மட்டும் என் ஆண்டவருக்குப் போதும் என்று கருதுவதால், என் மனைவியின் பங்களிப்பு இல்லாமலேயே என்னால் வாழ்வில் ஜெயிக்க முடியும்' என நம்மில் அநேகர் நினைத்துச் செயல்படுகின்றார்கள். இப்படிப்பட்ட தவறான எண்ணங்களினிமித்தம் தங்களுக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டுள்ளத் தங்கள் மனைவியின் பங்களிப்பை இவர்கள் வெகுவாய் அசட்டைப் பண்ணுகின்றார்கள்.

தனக்கு ஒரு ஏற்ற துணை கொடுக்கப்பட்டிருக்கின்ற பட்சத்தில், அந்த துணையுடனான தனது உறவை அசட்டைப் பண்ணிவிட்டு, தன்னைப்பற்றிய தேவ நோக்கத்தை வெற்றிகரமாய் நிறை வேற்றிட ஒரு மனிதனாலும் முடியாது. ஒரு புருஷன் தன் தேவனுடனான தனது உறவில் மட்டும் கவனமாய் இருந்து, அவனுக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டுள்ள அவனது மனைவிக்கும் அவனுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுமேயானால், அந்த மனிதனுடைய வாழ்வின் மூலம் வெளிப்படும் தேவனுடைய ஆற்றலானது மிகமிகக் குறைவாகவே இருக்கும். தாவீது கோலியாத்தை எதிர் கொள்ளும்பொழுது, கூழாங்கல்லை வெறுமனே தனது கையினால் எறிந்திருந்தால் எவ்வளவு சக்தி வெளிப்பட்டிருந்திருக்குமோ அவ்வளவு சக்தியே வெளிப்பட்டிருந்திருக்கும்.

இதனால் தான் கணவருக்கு வெறுமனே தேவனோடு மட்டும் ஐக்

கியம் இருந்தால் போதாது. அவருக்கு ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டுள்ள அவரது மனைவியும் அந்த ஐக்கியத்தில் இணைந்து கொள்ள வேண்டும். இது கணவனுக்கும் கல்லுக்கும் இடையிலுள்ள இசைவிற்கு ஒப்பானது. இப்படிப்பட்டதொரு இசைவைத் தாவீது தன் கரத்தில் எடுத்து எறிந்த பொழுது வெளிப்பட்ட ஆற்றலானது அரக்கனின் நெற்றியில் பாய்ந்து அவன் முகம் குப்புற விழுவதற்குக் காரணமாயிற்று. இப்படிப்பட்டப் பேராற்றல் தாவீதுக்குள் இருந்தாலும் அதை முழு அளவில் வெளிப்படுத்த அவருக்கு ஒரு கூழாங்கல்லும் அதற்கு ஏற்ற துணையாகிய ஒரு கவணும் தேவைப்பட்டது.

எப்பொழுது சேர்ந்திருக்கும்படிப் படைக்கப்பட்டுள்ளக் காரியங்கள் இசைந்திருக்கும் பொழுது, அந்த இசைவோடு வந்து தேவன் இணைந்து கொள்கின்றார். அப்பொழுது தேவனிடமிருந்து வெளிப்படும் பேராற்றலானது, அரண்களை நிர்மூலமாக்கிவிடுகின்றது. கணவன் மனைவிக்கு இடையில் இது போன்ற இசைவு இல்லாவிட்டால் அவர்களோடு இணைந்து கொள்ள தேவனால் முடியாது.

ஒருவராய் இசைந்திருக்கிற இருவரோடு அல்லது குழுவோடு தேவன் வந்து இணைந்து கொள்ளும்பொழுது, விளைவுகள் பலமடங்கு பெருகிவிடுகின்றன. கூட்டுறவில் தேவன் வந்து இணையும்பொழுது, பிறக்கும் பேராற்றல் அசாதாரணமானது. இப்படிப்பட்ட பேராற்றலை எதிர்த்து நிற்கப் பாதாளத்தின் சக்திகள் அஞ்சி நடுங்குகின்றன. இந்த மூவர் கூட்டணியைத்தான் முப்புரிநூல் என்கிறோம். முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது (பிர.4:12).

தனக்குப் போதிய ஒத்துழைப்பைத் தர மறுக்கும் மனைவியில்லாமலும், ஒரு மனிதனால் கிறிஸ்துவிற்காகச் செயல்பட முடியும். ஆனால், அந்த மனிதனால் கிறிஸ்துவிற்குள்ளான தனது அடுத்த மட்டத்திற்குள் அடியெடுத்து வைக்க முடியாது. இதற்கு அவனது மனைவியின் முழு ஒத்துழைப்பு அவனுக்குத் தேவை. புருஷனைப் பொறுத்த வரையிலும் அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கும்படி கொடுக்கப்பட்டுள்ள மனைவியானவள், புருஷனைப்பற்றியத் தேவனுடைய தரிசனம் நிறைவேறும் பாதையில் அவனுக்கு மிக முக்கியமாய்த் துணை செய்ய வேண்டிய உத்தமக் கூட்டாளியாக இருக்கின்றாள்.

ஏற்ற துணையைப் புரிந்து கொள்ளாத கணவனின் வழியாக வெளிப்படும் பெலன் மிகவும் குறுகிறது. அதே நேரத்தில் ஏற்ற துணையின் அவசியத்தைப் புரிந்து கொண்ட கணவரின் பெலனோ, கிறிஸ்துவிற்குள் பல மடங்காகப் பெருகிவிடுகின்றது. ஒரு கணவன் கிறிஸ்துவிற்குள்ளான தனது பெலனைப் பலமடங்காகப் பெருக்கிக் கொள்ள தேவனால் அவனக்கு உண்டாக்கிக் கொடுக்கப்பட்ட அற்புதமான படைப்புதான் மனைவி.

எதிரியை மேற்கொள்ளத்தக்க கிறிஸ்துவின் பேராற்றலானது புருஷனுக்குள் மறைந்திருந்தும் அது இன்னும் வெளிப்படாதிருப்பதற்கானக் காரணத்தை மிகவும் எளிதாகச் சொல்லிவிடலாம். சில இடங்களில் ஏற்ற துணையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கவண் சரியாக இருக்கின்றது. ஆனால், கூழாங்கல் சரியில்லை. இதற்கு மாறாக வேறு சில இடங்களில் கூழாங்கல் சரியாக இருக்கிறது. ஆனால் அதற்கு ஏற்ற துணையாயிருக்கும் படிக் கொடுக்கப்பட்டக் கவண் சரியில்லை. அதாவது, சில இடங்களில் புருஷன் சரியில்லாததால் பிரச்சனை. வேறுசில இடங்களிலோ, மனைவி சரியில்லாததால் பிரச்சனை.



குடும்பப் பகுதி

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். அதே போல, கணவன் மனைவி பிரிந்து நிற்பதால் எதிரிக்குக் கொண்டாட்டம்.

குடும்ப உறவில் கணவன் மனைவி ஒருவரையொருவர் புரிந்து கொள்ளத் தவறும் பட்சத்தில், தீமைக்கு எதிராக யுத்தத்தில் அவர்கள் இருவரும் நாளுக்குநாள் பலவீனப்பட்டுப் போவதைத் தவிர்க்க முடியாது. குடும்ப உறவில் கணவன் மனைவி ஒருவரையொருவர் புரிந்து கொண்டு ஒருவரோடு ஒருவர் கை கோர்த்து நடக்க முன்வரும் பட்சத்தில், தீமைக்கு எதிரான யுத்தத்தில் அவர்கள் இருவரும் நாளுக்கு நாள் பலப்படுவதை நன்கு உணர முடியும்.

புருஷனுக்குள்ளிருந்து வெளிப்படும் கிறிஸ்துவின் ஆற்றலானது பலமடங்காகப் பெருக வேண்டுமானால், அதற்கு, ஏற்ற துணையின் பங்களிப்பானது, அவனுக்கு மிக மிக அவசியம் என்ற இரகசியத்தைக் கிறிஸ்துவானவர் நன்கு அறிந்திருக்கின்றார். தேவனோடும் தேவன் நமக்குத் தந்த ஏற்ற துணையோடும் இசைந்திருப்பதினிமித்தம், எப்படிப்பட்ட எதிரியையும் தாக்கி அழிப்பது மட்டுமல்ல, எப்படிப்பட்ட எதிரியிடமிருந்தும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் நம்மால் முடியும். இந்த மூவர் கூட்டணியானது மிகமிக வலிமையானது.

எதிர்க்க முடியாததொரு மாபெரும் சக்தியை வீழ்த்த, ஒரு கணவன் தன் சக்தியைப் பல மடங்காகப் பெருக்கிக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியே இல்லை. இந்த விஷயத்தில் அவனுக்குத் துணை செய்வதற்காகத்தான் தேவன் புருஷனுக்கு ஒரு ஏற்ற துணையைக் கொடுத்து, அவனை ஆசீர்வதித்திருகின்றார்.


சுத்திகரிப்பின் மூலம் எழுப்புதல் நடத்தும்

**ஊழியர் தரிசன முகாம் 2014**

கருப்பொருள் **நாம் இருவரல்ல ஒருவரானோம்**

**நாள்** **2014 செப்டம்பர்**
**10,11,12**

**இடம்**
**ஜெபத்தோட்டம்**
காளையார்கோவில்

தேவ செய்தியாளர்கள்
தந்தை **S.J.பெர்க்மான்ஸ்**
போதகர் **L.ஜெபராஜ்**
போதகர் **J.ஜோஸ்வா எஸ்டோவ்**

உணவுக் கட்டணம் நபர் ஒருவருக்கு **ரூ.150/-**

குறிப்பு:
* இதில் முழு நேர, பகுதி நேர, திருமணத்திற்குக் காத்திருக்கிற இளம் ஊழியர்கள் மற்றும் உடன் ஊழியர்கள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதியுண்டு.
* ஊழியர்கள் கணவன் மனைவியாகச் சேர்ந்து பங்குபெற அழைக்கிறோம்
* தட்டு, டம்ளர், படுக்கை விரிப்பு கொண்டு வரவும்
* விசுவாசிகள் மற்றும் மூப்பர்கள் கலந்துகொள்ள அனுமதியில்லை.

**தொடர்பு: 98945-16160, 99447-90176, 98945-16878**








**கள் அல்ல, தேவனுடைய வார்த்தையைத் தேவனிடத்திலிருந்து பெற்று ஜனங்களுக்குக் கொடுக்கும்படி தேவனால் அழைக்கப்பட்டவர்கள்.** தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். ஆகவே, ஒவ்வொருவாரமும் ஒரு தாக்கத்தை உண்டாக்கும்படி, அனுதினமும் ஜனங்களுடைய வாழ்க்கையில் மறுரூபம் உண்டாகும்படி உங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவர் பேச வேண்டும். ஒவ்வொரு வாரமும் உங்கள் சபை ஆராதனையில் ஜனங்கள் எதையாகிலும் ஆண்டவரிடம் இருந்து பெற்றுதான் செல்ல வேண்டும். உங்களுடைய ஒவ்வொரு ஊழியத்திலும், ஒவ்வொரு பிரசங்கத்திலும் இப்படிப்பட்டக் காரியங்கள் நடக்க வேண்டும். நடந்தே ஆக வேண்டும். இப்படி உங்களுடையப் பிரசங்கம் ஒரு மகிமையான பிரசங்கமாக இருக்க வேண்டுமானால், சில காரியங்களை உங்களுக்கு எழுதுகிறேன்.

'பிரசங்கம், போதனை, தீர்க்கதரிசன வார்த்தைகள்' மூலமாக ஜனங்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டுவரும் அளவுக்குத் தொடர்பு கொள்ள வேண்டும். மக்களோடு தொடர்பு கொள்ளுவதை விட மக்களை, தேவனோடு இணைக்க வேண்டும். *Every one communicate but few connect.* அப்படியானால் என்ன அர்த்தம் எல்லோரும் தொடர்பு கொள்ளுகின்றார்கள். ஆனால், சிலர் தான் ஜனங்களோடு, தேவனோடு இணைந்து கொள்ளுகிறார்கள். பிரசங்கத்தின் மூலம் *Communicate* அல்ல *Connect* பண்ண வேண்டும். இது மிகவும் முக்கியம். நாம் தேவனோடு இணைந்து, ஜனங்களோடு இணைந்து ஜனங்களுடைய வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு நாம் பிரசங்கிக்க வேண்டும். அதற்கு முதலாவதாக,

### ஜனங்களுடைய தேவைகளை அறிந்து கொள்ளுங்கள்

பிரசங்கிக்கும் முன்பதாக ஜனங்கள் என்ன தேவையோடுகூட இருக்கின்றார்கள் என்பதை நீங்கள் கொஞ்சம் அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொண்டால்தான் அவர்களோடு நீங்கள் உங்களை இணைத்துக் கொள்ள முடியும். இணைத்து கொண்டால்தான், நீங்கள் பேசுவதை ஜனங்கள் கேட்பார்கள். அவர்கள் எந்த இடத்தில் இருக்கின்றார்களோ அந்த இடத்தில் இருந்து நீங்கள் உங்கள் பிரசங்கத்தை ஆரம்பிக்க வேண்டும். அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினையில், சோர்வில் இருக்கும்பொழுது நீங்கள் வேகமாக சீயோனைப் பற்றி பிரசங்கித்தால் அது வேலை செய்யாது. ஜனங்கள் என்ன தேவையோடு இருக்கின்றார்கள் என்று அந்த தேவையைப் பற்றி பேசும்பொழுது, அவர்கள் உங்களைக் காதுகொடுத்துக் கேட்பார்கள். மனிதன் தேவையுள்ளவனாய் இருக்கின்றான். அவனுக்குள் தேவைகளை வைத்துதான் கர்த்தர் படைத்திருக்கின்றார்.

### I. மனிதனுடைய தேவைகள்

**1. உணருகின்ற தேவைகள்**

(சாப்பாடு, உடை, இருப்பிடம்). ஒரு வேளை அடுத்த நேர உணவுக்காகக் கூட தேவைகளோடு இருக்கலாம். நாம் பரலோகத்திலிருக்கின்ற பொற்தள வீதியைப் பற்றிப் பேசி, அதில் நாம் நடக்கப் போகின்றோம் என்று சொல்வதை விட, மறுமையில் பொற்தள வீதியில் நம்மை நடக்கப்பண்ணுகின்ற தேவன், இந்த பூமியில் உன்னுடைய அடுத்த வேளை உணவு தேவைகளையும் சந்திப்பார் என்று சொல்லலாமே. அப்பொழுது தான் அவர்கள் தங்கள் கைகளை உங்களுக்குக் கொடுப்பார்கள். அவர்கள் கையைப் பிடித்துக் கொண்டு ஒருமணி நேரம் கூட்டிக் தேவனுடைய வார்த்தைக்குள் கடந்து

போக வேண்டும். அப்படியில்லாமலும், நீங்கள் 20 பாயிண்ட் வைத்துக் கொண்டு அந்த ஒரு மணி நேரத்தை ஓட்டி முடிக்கவும் முடியும்.

இன்றைக்கு நல்ல பிரசங்கம் செய்தேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். ஜனங்களை உங்களோடுகூட, தேவனோடுகூட இணைக்க வேண்டும். இல்லாவிட்டால் ஜனங்கள் வேறுஎதையோ யோசித்து, சிந்தித்துக் கொண்டு இருப்பார்கள். அப்படியானால் நீங்கள் யாருக்குப் பிரசங்கம் செய்கின்றீர்கள் ? பிரசங்கித்து என்ன பயன்கள் ?

நீங்கள் இதை விளங்கிக்கொள்ளும்படி ஒரு சம்பவத்தை உங்களுக்கு எழுதுகின்றேன். ஒரு ஊழியக்காரர் என்னிடம் கூறினார்: என்னுடைய சபையில் இரண்டு நபர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நான் பிரசங்கிக்கும்பொழுது, அந்த நேரத்தில் வேறு ஏதாவது ஒரு புத்தகத்தை வைத்து வாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் ? நான் கூறினேன்: அவர்களை ஒன்றும் செய்ய முடியாது. உங்களிடம் தான் சில காரியம் செய்யவேண்டியதிருக்கின்றது. இப்பொழுது பிரச்சினை அவர்களிடம் இல்லை, பிரசங்கியாராகிய உங்களிடம் தான் இருக்கின்றது. இந்த விசுவாசிகளை எப்படி மாற்றுவது ? என்று யோசிக்கின்றோம். விசுவாசிகளை ஒன்றுமே பண்ண முடியாது. நான் என்னுடைய பிரசங்கத்தில் கூறுவேன், விசுவாசிகளைப் போல தங்கமானவர்கள் ஒருவரையும் நாம் பார்க்கவே முடியாது என்று. அவர்களை நீங்கள் மாற்ற வேண்டிய அவசியமே இல்லை. மாற வேண்டியது எல்லாம் ஊழியர்கள் தான்.

ஊழியர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்றால், மற்றவர்கள் தான் மாற வேண்டும், திருந்த வேண்டும் என்று. ஊழியர்கள் தங்களைக் குறித்து: கர்த்தர் சொன்னதுபோல "நான் கர்த்தர் நான் மாறாதவர்" என்று இருக்கக்கூடாது. மாறவேண்டிய அவசியம் என்னிடம் இல்லை என்று இருக்கக்கூடாது. நாம் இயேசு கிறிஸ்து இல்லை. நாம் மாற்ற வேண்டியவைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் அங்கே உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்றால், நாம் தான் சரியில்லை என்று அர்த்தம். நாம் அவர்களோடு இணைக்கப்படவில்லை என்பதை அறிந்து அவர்களுடைய தேவைகளை அறிந்து அவர்களோடு இணைக்கப்பட வேண்டும். ஜனங்களுடைய சரீரப்பிரகாரமான தேவைகளைக் குறித்துப் பேசும்பொழுது அவர்கள் அதை உணர்ந்து உங்களோடு இணைக்கப்படுகின்றார்கள்.

**2. பாதுகாப்பு தேவை:**

அடுத்ததாக அவர்களுடைய பாதுகாப்பு தேவைகளைக் குறித்து நீங்கள் பேச வேண்டும்.

**3. உண்மை அன்பு தேவை:**

மூன்றாவதாக உண்மையான அன்பு எல்லா மனிதனுக்கும் தேவை என்கின்ற உணர்வு ஜனங்களுக்கு இருக்கின்றது. இதைக் குறித்துப் பேச வேண்டும். ஒவ்வொரு மனிதனைக் குறித்தும் கர்த்தர் ஒரு நோக்கம் வைத்திருக்கின்றார், எதற்காக நாம் வாழ்கின்றோம் என்கின்ற நோக்கத்தைக் குறித்து ஜனங்களிடம் பேச வேண்டும். கிறிஸ்துவிற்குள் நீங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் குறித்துத் தன்னிநிலை உணர்தல் பற்றிப் பேச வேண்டும். இப்படிப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் பதில் ஊழியராகிய நம்முடைய கையில் இருக்கின்றது.

அது வேத புத்தகம். ஆண்டவர் நமக்குக் கொடுத்துள்ள வேதத்தில் எல்லாக் கேள்விக்கான பதில் இருக்





கின்றது. இந்த வேத வார்த்தைகளோடு நமது நேரத்தினை செலவழித்து, வசனம் நமக்கு என்ன சொல்லுகின்றது என்பதைக் கவனித்து, சிந்தையை ஒருமுகப்படுத்தி, வார்த்தைக்குள் இருந்து கர்த்தர் ஜனங்களோடு என்ன பேசுகிறார் என்பதைப் பெற்றுக் கொண்டு, போதிக்க வேண்டும், பிரசங்கிக்க வேண்டும்.

நாம் வேதத்தை காலையில் ஒரு அதிகாரம் மாலையில் ஒரு அதிகாரம் என்று வாசித்துப் பழகி விட்டோம். வேதம் வாசிக்கவில்லை என்றால் ஒரு மாதிரி இருக்கின்றது என்பதற்காக வேதம் வாசிக்கக்கூடாது. ஒரு மாதிரியாக இருந்தால் வேதம் வாசிக்கக் கூடாது. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். ஒரு மாதிரியாக இருக்குமே என்பதற்காக வேதம் வாசிக்கக் கூடாது. ஒரு மதச் சடங்கு போல செய்யக்கூடாது. இது வழக்கமான ஒரு காரியம் கிடையாது. நீங்கள் வேதத்தையே வாசிக்காவிட்டாலும் கர்த்தர் உங்கள் மேல் வைத்த அன்பில் மாறமாட்டார். அதற்காக வேதம் வாசிக்காமல் இருக்கக் கூடாது என்பது அல்ல.

"வேதத்திலுள்ள உமது அதிசயங்களைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்" என்ற விதத்தில் வேதத்தை வாசிக்க வேண்டும். பல அதிகாரம் வாசிப்பது நல்லதுதான். வசனம் நமக்குள்ளே போய் நம்முடைய எண்ணங்களை, நம்முடைய ஆவியை, நம்முடைய ஆத்துமாவை மறுரூபமாக்குகிறதா ? கிறிஸ்து யார் ? கிறிஸ்துவிற்குள் நான் யார் என்பதை அறிந்திருக்கிறோமா ? அந்த அளவுக்கு வார்த்தையோடு நேரத்தை செலவழிக்கிறோமா ?

"மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" – லூக்கா 4:4.

மீன் எதில் பிழைக்கிறது ? தண்ணீரில். ஒரு விசுவாசி, ஒரு ஊழியன் எதில் பிழைக்க வேண்டும் ? தேவனுடைய வார்த்தையில். இந்தப் பிழைப்பூட்டுகின்ற வார்த்தையில் விசுவாசிகள், தேவனுடைய ஊழியர்கள் வேதவசனத்தில் பிழைக்கப் பழக வேண்டும். வசனமே வாழ்வாக மாற வேண்டும். வார்த்தையில்லாமல் எனக்கு வாழ்வு இல்லை என்ற வாழ்க்கைக்குள் வந்து விட வேண்டும்.

### பரிசுத்த வேதாகமம் ஒரு வாழ்க்கைப் புத்தகம்

வேதம் ஒரு பக்தி புத்தகம் அல்ல. ஒரு புனித நூல் அல்ல. கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த வேதாகமம் ஒரு புனித நூல் அல்ல. பரிசுத்த வேதாகமம் ஒரு வாழ்க்கைப் புத்தகம். இது வாழ்வளிக்கின்ற புத்தகம். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், ஆவியும் உள்ளதாயிருக்கிறது. இந்த வார்த்தை மக்களுடைய எண்ணங்களை, சிந்தனைகளை மாற்றக் கூடியது. வாழ்க்கையைத் தலைகீழாய் (தேவனுடைய திட்டப்படி) மாற்றக் கூடியது. ஒவ்வொரு வாரமும் பிரசங்கம் செய்யும்பொழுது இந்த உணர்வுகளோடு பிரசங்கம் செய்ய வேண்டும்.

வார்த்தையைக் கொடுக்கும்பொழுது, வசனத்தைப் பேசும் பொழுது, இது நம்முடைய வார்த்தையல்ல, தேவாதி தேவன் ஜனங்களுக்குக் கொடுத்த ஜீவ அப்பம். ஆகவே, தேவைகளைக் குறித்து பேசும் பொழுது, தேவைகளைச் சந்திக்கக்கூடிய வார்த்தைகளைப் பெற்று பேசும்பொழுது தான் மக்களுடைய தேவைகள் சந்திக்கப்படுகின்றது. ஆகவே, ஜனங்களின் தேவையை உணர்ந்து, அவர்களோடு கூட நாம் இணைக்கப்பட்டு, கொஞ்சம் கொஞ்சமாக சீயோனுக்குப் போய்ச் சேர வேண்டும். ஆரம்பமே சீயோனில் ஆரம்பிக்கக் கூடாது. முதலாவது ஜனங்களுடைய தேவைகளை அறிந்து கொள்ளுங்கள்.

**தொடரும்**

ளில் ஒன்றான சிரியாவில் அதிபர் பாசர் அல்அசாத் தலைமையிலான அரசின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கியப் பகுதியை அல்குவைதா ஆதரவு பயங்கரவாத அமைப்பின் ஐ.எஸ்.ஐ.எஸ் நேற்று கைப்பற்றியது.

வாஷிங்டன் ஆகஸ்ட்10:பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடவடிக்கை அதிகரித்துள்ளதால் அவசியமில்லாமல் அந்நாட்டுக்குச் செல்ல வேண்டாம் என அமெரிக்க அரசு தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மைதுகுரி ஆகஸ்ட்11:ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில், அரசு படைகளுக்கு எதிராக சண்டையிட்டு வரும் 'போகோஹறாம்' பயங்கரவாதிகளுக்குப் பயந்து அந்நாட்டின் வடக்குப் பகுதி நகரிலிருந்து தப்பியோடிய நூற்றுக்கணக்கான மக்கள், நான்கைந்துநாட்களாக, சாப்பிட எதுவுமின்றி மலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பாக்தாக் ஆகஸ்ட்12:பாக்தாத்தில் திடீரென ராணுவம் குவிக்கப்பட்டதால் அங்கு பதட்டம் ஏற்பட்டுள்ளது. அதிபர் புவாத் மசூமின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது. அந்நாட்டு அரசியல் சூழ்நிலைகளில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பர்குசன் ஆகஸ்ட்13:அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் வேண்டுமென்றே கறுப்பின இளைஞரை போலீஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக் கொன்றதை அடுத்து அப்பகுதியில் பெரும்பான்மையாக வாழும் கறுப்பினத்தவர்கள் வன்முறையில் இறங்கினர். அவர்களைக் கலைக்க போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

நியூயார்க் ஆகஸ்ட் 14:இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள் இருவருக்கு, உலகின் மிக உயரிய கணிதவியல் விருது வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத் ஆகஸ்ட்15: பாகிஸ்தான், இந்தியா இடையே நிலவும் பதற்றத்திற்கு அடிப்படையே காஷ்மீர் பிரச்சினைதான். அந்தப் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பதன் மூலம் தான் இருதரப்பு உறவுகளும் மேலும் வலுவடையும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் சுதந்திரதின உரையில் குறிப்பிட்டார்.

## விளையாட்டு செய்திகள்

கிளாஸ்கோ ஆகஸ்ட்1: காமன்வெல்த் விளையாட்டு மல்யுத்தப் போட்டியில், இந்தியாவின் யோகேஸ்வர்தத் (65கிகி பயிதா குமாரி (55கிகி)தங்கம் வென்று அசத்தினார். பெண்களுக்கான(63 கிகி)பிரிவு பைனலில் தோல்வியடைந்த இந்தியாவின் கீதிகாஜகார் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

கிளாஸ்கோ ஆகஸ்ட்2: காமன்வெல்த் போட்டியில் பங்கேற்கவந்த சியாரா லியோன் வீரர் மோசஸ் செசேவுக்கு 'எபோலா' சோதனை நடத்தப்பட்டது. இது பிரிட்டனில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆப்பிரிக்காவின் காங்கோ நாட்டில் 'எபோலா' வைரஸ் கண்டறியப்பட்டது. 'எபோலா' வைரஸ் மிகவும் கொடியது. இந்நோய்த் தாக்கினால் 10ல் 9 பேருக்கு மரணம் நிச்சயம்.

கிளாஸ்கோ ஆகஸ்ட்3:காமன்வெல்த் விளையாட்டு இன்றுடன் முடிகிறது. கடைசி நாளில் பாட்மிட்டன், ஹாக்கி, ஸ்குவாஷ் உள்ளிட்ட போட்டிகள் முடிந்தபின் இரவு நிறைவு விழா கோலாகலமாக நடக்கவுள்ளது.

லண்டன் ஆகஸ்ட்4:ஆண்டர்சனின் அநாகரீக நடத்தை அம்பலமாகியுள்ளது. ரவீந்திர ஜடேஜாவின் பல்லை உடைத்து விடுவதாக மிரட்டியதை ஒப்புக் கொண்டுள்ளார்.

புதுடில்லி ஆகஸ்ட்5:காமன்வெல்த் போட்டியில் சர்ச்சையில் சிக்கிய இரண்டு இந்திய நிர்வாகிகள் ஒருவழியாக தப்பினர். சமரச பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து இவர்கள் மீது குற்றச் சாட்டுகள் பதிவு செய்யப்படவில்லை.





# ஜெபக் குறிப்புகள்

**கீழ்க்கண்ட குறிப்புகளுக்காக ஜெபிக்கவும்**

1. அல்லேலூயா டவர், மதுரை நல்ல சமாரியன் ஆலய ஊழியங்களுக்காக, போதகர்களுக்காக, அவர்கள் ஊழியங்களுக்காக, குடும்பங்களுக்காக
2. நல்ல சமாரியன் ஐக்கிய கிளை சபை ஊழியர்களுக்காக, சபைகளுக்காக, விசுவாசிகளுக்காக.
3. யாகேல் பெண்கள் ஜெபக்குழுவிற்காக, மருத்துவமனை ஊழியங்களுக்காக, கிராம ஊழியங்களுக்காக, சிறுவர் ஊழியங்களுக்காக
4. அல்லேலூயா டவரில் விசேஷ வேதபாட வகுப்பு கிருபையும் விசுவாசமும் (Grace & Faith) Pr.டேவிஸ் அக்டோபர் 14 – 18.
5. ஆகஸ்ட் 31 முதல் செப்டெம்பர் 7 வரை நடைபெறும் ஸ்தோத்திரப் பெருவிழாவிற்காக. (Pr.லூக்காசேகர், Pr.ஜாய், Eva.ரீகன் கோமஸ், Pr.Y.வெஸ்லி, Pr.ஜான் ஜெபராஜ், Pr.ஜெயசீலன்).
6. சென்னை, ஓசன்னா டவர், Praise Tower, ஊழியங்களுக்காக, Pr.டேனியல் ஆல்ப்பான்ஸ், Pr.தாம்சன், Pr.ஜார்ஜ் இராபர்ட் இவர்களின் குடும்பங்களுக்காக,
7. ஏற்கனவே இடம் வாங்கப்பட்டுள்ள இடங்களில் ஆலயம் கட்டப்பட (அருப்புக்கோட்டை, கம்பம் கூடலூர், பாளையம்கோட்டை, திருப்புவனம், பனகுடி...), பொங்கலூர், நிலக்கோட்டை போன்ற இடங்களில் இடம் வாங்கப்பட
8. அனைத்து மிஷனரி ஊழியங்களுக்காக, மிஷனரி ஸ்தாபனத் தலைவர்களுக்காக *(IGM, ICGM, CGMM, GEMS, IMS, CMS, IET, BYM, FMPB, Shalom)*
9. ஜெபத்தோட்ட ஊழியங்களுக்காக *(Fr.S.J.*பெர்க்மான்ஸ்), பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்களுக்காக (*Bro.*எசேக்கியா பிரான்சிஸ், *Sis.*பெனிட்டா பிரான்சிஸ்), இயேசு அழைக்கிறார் ஊழியங்களுக்காக (*Dr.*பால் தினகரன், *Mrs.*ஸ்டெல்லா தினகரன்)
10. *Blessing TV, God TV* போன்ற அனைத்து *T.V* ஊழியங்களுக்காக, *Local TV Channels* மூலமாக சத்தியம் எல்லா இந்திய மொழிகளிலும் அறிவிக்கப்பட
11. இஸ்ரவேல் தேசத்தின் சமாதானத்திற்காக, இலங்கை தேச எழுப்புதலுக்காக, இந்திய தேச எழுப்புதலுக்காக, அகில உலக எழுப்புதலுக்காக

## போதகர் பங்கேற்கும் கூட்டங்கள்

- செப். 9 –28 (UAE, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து) Pr.S.ஜோசப் பாலசந்திரன் மற்றும் Pr.சாக்ராபார்ட் செய்யும் ஊழியங்களுக்காக.
- அக்.2, உபவாச விடுதலை முகாம் (செய்தி: Pr.காலேப் ஜெயக்குமார் & Pr.S.ஜோசப் பாலச்சந்திரன்).
- அக்.10,11,12 குடும்ப ஆசீர்வாதப் பெருவிழா. *(Shalom Ministries - Bro. Rajasing & Team).*
- பீஹார் (GEMS) ஊழியங்களுக்காக, Sikaria Visit, Chatra Crusade & Fr.பெர்க்மான்ஸ், Pr.S.ஜோசப் பாலசந்திரன் & குழுவினருக்காக.

**ஜெபியுங்கள்...**

# செய்தி சோலை



## உள்நாட்டு செய்திகள்

புனே ஆகஸ்ட் 1: மகாராஷ்டிரா மாநிலம், புனே அருகே ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இறந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது. சகதி மற்றும் பாறை குவியல்களுக்குக் கீழே மேலும் 117 பேர் சிக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கொழும்பு ஆகஸ்ட் 2: தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் நரேந்திர மோடி குறித்து இலங்கை இராணுவத்தின் இணைய தளம் வெளியிட்ட அவதூறு செய்திகளுக்குப் பலத்த கண்டனம் எழுந்ததை அடுத்து இலங்கை அரசு நிபந்தனையற்ற மன்னிப்புப் கேட்டது.

சென்னை ஆகஸ்ட்3: மாணவர்களுக்கு முன்னுதாரணமாக வழிகாட்டியாக ஆசிரியர்கள் நடந்து கொள்ளவேண்டும். இதை மீறி மாணவர்களிடம் தவறாக நடந்து கொண்டால் உடனடியாக டிஸ்மிஸ் செய்யப்படுவர் என கல்வித் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை ஆகஸ்ட் 4: காமன்வெல்த் போட்டியில் தங்கம் வென்ற குவாஷ் வீராங்கனைகள், ஜோஸ்னா சின்னப்பா மற்றும் தீபிகா பல்லீகல் இருவருக்கும் தலா 50 இலட்சம் ரூபாய் வழங்கிட முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

புதுடில்லி ஆகஸ்ட் 5:கவர்ச்சிகரமான முதலீட்டுத் திட்டங்களை அறிவித்து மக்களை ஏமாற்றும் சிட்பண்ட் நிறுவனங்களைக் கட்டுப்படுத்த, பங்குச் சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான 'செபி'க்கு அதிகாரம் வழங்கும் வகையில் பங்குகள் சட்டங்கள்(திருத்த) மசோதா 2014 நேற்று லோக்சபாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

மதுரை ஆகஸ்ட் 6: செவ்வாய் கிரகத்திற்கு அருகில் விண்வெளி வீரர்களை அனுப்புவதற்காக சர்வதேச திட்ட வடிவமைப்புப் போட்டியில் பங்கேற்க, தமிழக மாணவர் விஷ்ணு பிரசாத்ராம் ஆகஸ்ட் 9ல் அமெரிக்கா சென்றார்.

மதுரை ஆகஸ்ட் 7: மதுரை மாநகராட்சியில் நான்கு நாட்களுக்கு ஒரு முறையாக இருக்கும் குடிநீர் வினியோகம் ஆகஸ்ட் 15 முதல் இரு நாட்களுக்கு ஒரு முறையாக மாற்றப்படுகிறது.

திண்டுக்கல் ஆகஸ்ட்8: விண்வெளிக்கு ராக்கெட்டை செலுத்தும்போது, ஏற்படும் அதிர்வுகளின் அளவைக் கண்டறியும் 'சென்சார்'கருவியை 'நானோ' தொழில்நுட்பத்தில் கண்டறிவதற்கான ஆராய்ச்சியில் காந்திகிராம பல்கலை கழகம் ஈடுபட்டுள்ளது.

சென்னை ஆகஸ்ட் 9: பி.எட்.படிப்பை இரண்டு ஆண்டுகளாக மாற்ற, ஆசிரியர் கல்விக்கான தேசிய கவுன்சில் ஆய்வு செய்து வருகிறது என உயர் கல்வித்துறை அமைச்சர் திரு.பழனியப்பன் கூறினார்.

ஐத்ராபாத் ஆகஸ்ட் 10: ஐதராபாத்தின் சட்டம் ஒழுங்கைக் கையாளும் விஷயத்தில் கவர்னருக்குச் சிறப்பு அதிகாரம் அளிக்க முடியாது என மத்திய அரசுக்கு தெலுங்கானா மாநில அரசு தெரிவித்துள்ளது.

புதுடில்லி ஆகஸ்ட் 11: சுதந்திர போராட்ட தலைவர் நேதாஜி சுபாஷ்சந்திர போசுவுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட உள்ளதாக வெளியான தகவலால் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது. நேதாஜி குடும்பத்தினர் இந்த விருதை ஏற்கப் போவதில்லை என தெரிவித்துள்ளனர்.

புதுடில்லி ஆகஸ்ட் 12: உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்ற நீதிபதிகளை தேர்வு செய்ய விரைவில் புதுமுறை





அமலாக உள்ளது. தற்போது செயல்பாட்டில் உள்ள நீதிபதிகள் தேர்வு குழுவை நீக்குவதற்கான அரசியல் சட்ட திருத்த மசோதா நேற்று லோக்சபாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

புதுடில்லி ஆகஸ்ட் 13:செய்தி மற்றும் கருத்தின் பன்முகத் தன்மையை உறுதி செய்யும் முயற்சியாக தொலைதொடர்பு ஒழுங்கு முறை ஆணையமான 'டிராய்'நேற்று மத்திய அரசுக்கு அளித்துள்ள குழுமங்கள் ஊடகத்துறையில் செயல்பட தடை விதிக்கப்படுகிறது. இதனால் தமிழகத்தில் கட்சி 'டி.வி' சேனல்களின் கதி என்னவாகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஐத்ராபாத் ஆகஸ்ட் 14: ஆந்திராவிலிருந்து தெலுங்கான மாநிலம் பிரிக்கப்பட்டபின் அங்கு நிலவும் நிர்வாக சிக்கல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இரு மாநிலங்களுக்கும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட அலுவலகங்கள் போக, பொதுவாக நிர்வகிக்க வேண்டிய அலுவலகங்கள் விவகாரத்தில் இரு மாநிலங்களும் மோதிக் கொள்கின்றன. இதனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு சிக்கல் ஏற்பட்டு உள்ளது.

சென்னை ஆகஸ்ட் 15: சுதந்திர தின விழாவையொட்டி போலீஸ் அதிகாரிகளுக்கு மத்திய அரசு விருது வழங்குவது வழக்கம். இந்த ஆண்டுக்கான விருது நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு செய்திகள்

ஜெருசலம் ஆகஸ்ட்1: பாலஸ்தீனத்தின் காசா பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்களை குறிவைத்தும், அவர்களின் சுரங்கப் பாதைகளை தகர்க்கும் வகையிலும், 24வது நாளாக இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் தாக்குதலில், நேற்று கூடுதலாக, 16 ஆயிரம் வீரர்கள் சேர்க்கப்பட்டதை அடுத்து, சண்டையில் 86 ஆயிரம் இஸ்ரேலியர் ஈடுபட்டுள்ளனர்.

வாஷிங்டன் ஆகஸ்ட் 2:உலக வர்த்தக அமைப்பின், வர்த்தக ஏற்பாடு ஒப்பந்தம் ஏற்படாமல் போனதற்கு, இந்தியா மற்றும் சில நாடுகள் தான் காரணம் என அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

பீஜிங் ஆகஸ்ட்4: சீனாவுக்கும், மியான்மர் நாட்டுக்கும் இடையே திபெத் பகுதியில், நேற்று பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6.5 ஆக பதிவாகியிருந்த இந்த பூகம்பத்தால், 150 பேர் பலியாயினர். இந்த பூகம்பம் தரைமட் டத்திலிருந்து 12 கி.மீ. ஆழத்தில், பூகம்பத்தின் மையப்புள்ளி இருந்தது.

லண்டன் ஆகஸ்ட் 5: முதல் உலகப்போர் முடிந்து 100 ஆண்டுகளுக்குப்பின், பிரிட்டனில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம் ஐரோப்பா முழுவதும் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

வாஷிங்டன் ஆகஸ்ட் 6:சிறியரக ஏவுகணைகளில் இருந்து அமெரிக்காவின் முக்கிய நகரங்களைக் காக்கவும், முக்கிய இடங்களை காத்துக் கொள்ளவும், இஸ்ரேல் நாட்டிடம் இருந்து அமெரிக்கா வாங்க உள்ள 'அயான்டும்' ஏவுகனை எதிர்ப்பு தொழில் நுட்பத்தை மேற்கொண்டு செயல்படுத்த அமெரிக்கா 1,300 கோடி ரூபாயை இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது.

பாக்தாக் ஆகஸ்ட் 7:ஈராக்கில் உள்ள மிக சிறுபான்மை யாஸிடி இனத்தவரை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் குறிவைத்து, தாக்கி அழித்து வருவதை ஐ.நா கண்டித்து உள்ளது. மதத்தின் பெயராலோ அல்லது இனத்தின் பெயரிலோ நடத்தப்படும் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என ஐ.நா. தெரிவித்துள்ளது.

கலிபோர்னியா ஆகஸ்ட் 8:விவாகரத்து அதிகமாகக் காணப்படும் அமெரிக்க மக்களிடையே திருமணமாகி 62 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்த ஜோடி, மரணத்திலும் பிரியாமல் ஒன்றாக இறந்தனர்.

பெண்ரூட் ஆகஸ்ட் 9:மேற்காசிய நாடுக